
# 2013 වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# Annual Report



රජයේ මුද්‍රණ නීතිගත සංස්ථාව
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
State Printing Corporation


# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

ஆண்டறிக்கை, கணக்குக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

# 2013

## ஆண்டறிக்கை

2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த 46 வது ஆண்டுக்கானது.
2013 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து
2013 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை



# நிறுவனத்தின் நோக்கு

அச்சுத் தொழிலில் முன்னோடியாக திகழ்வதன் மூலம் வெளியீட்டில் அதிலும் குறிப்பாக கல்வி அபிவிருத்தி வெளியீட்டை ஊக்குவித்து பாதுகாப்பதுடன் அப்பியாச புத்தக மற்றும் காகிதம் உட்பட எழுதுவதற்கு தேவையான பொருள்களின் விற்பனை மற்றும் சந்தை ஆகியவற்றில் முன்னோடியாக திகழுதல்.

# பணி

திறமையும் தைரியமும் மிக்க மனநிறைவு கொண்ட ஊழியர்களைக் கொண்ட முன் உதாரணமான அரச கூட்டுத்தாபனமாக திகழ்வதுடன் அச்சுத் தொழிலில் அதி உயர் தரத்திற்கு ஏற்ப போட்டியான விலைக்கு அச்சுப் பொருள் உற்பத்திகளை மக்களின் தேவை மற்றும் நலம் கருதி விநியோகித்தல்.

பானலுவ,
பாதுக்க.

கௌரவ பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடக அமைச்சர்,
பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடக அமைச்சு,
இல.163, கிருளப்பனை மாவத்தை,
பொல்ஹேன்கொட வீதி,
கொழும்பு – 05.

கௌரவ ஐயா,

நிதிச் சட்டம் இலக்கம் 38, 1971, 14 வது பிரிவின்படி, 1, ஜனவரி இலிருந்து 31.12.2011 வரைக்குமான ஆண்டு தொடர்பாக பின்வருவனவற்றை பணிப்பாளர் சபையின் சார்பில் உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

1. அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கை.
2. கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகை, செயலாற்று கணக்குகள் மற்றும் இலாப, நட்ட கணக்கு.
3. கணக்காய்வாளர் நாயகத்தின் கருத்துரைகள்.

தங்களின் கவனத்திற்காக முன்வைக்கின்றேன்

தங்கள் விசுவாசமுள்ள,

**ரவீந்திர யசலால் கலன்சூரிய**
தலைவர்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்



# தலைவரின் செய்தி

ஆசிய அச்சுக் கைத்தொழில் துறையில் முன்னோடியாக 1968 ஆம் ஆண்டு தொடக்கம் படிப்படியாக முன்னேறி 45 ஆண்டு காலப்பகுதியில் தடைகளை தாண்டி கடந்து வந்த வெற்றிப் பாதையை பின்னோக்கி பார்க்கும் போது முடிவடைந்த மற்றுமொரு காலப்பகுதிக்கென தயாரிக்கப்படும் 2013 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை மற்றும் கணக்கீட்டு இலாபத்தன்மையை போன்று செயலாற்றுகையை தொடர்ந்தும் பேணிக்கொண்டு இங்கு சமர்ப்பிக்க கிடைத்தமையையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

நல்லாட்சியை முதன்மையாகக் கொண்டு இணக்கவாத ஆட்சியினூடாக அடியெடுத்து வைத்த அதிமேதகு ஜனாதிபதி உட்பட புதிய அரசாங்கத்தின் ஆட்சியை யதார்த்தபூர்வமாக்குவதற்கு பங்களிப்பை வழங்க வாய்ப்பு கிடைத்தமையானது எமக்கும் நாட்டிற்கும் எதிர்காலத்து சுபீட்சத்திற்கு உறுதுணையாக அமையுமென்பதில் ஐயமில்லை. சமுதாயத்தினால் அங்கீகரிக்கப்படாததும் வர்த்தக உலகில் பரவலாக காணப்படுவதுமான இலஞ்சம், மோசடி, ஊழலை ஒழித்து சமுதாய முன்னேற்றத்திற்காக வெளிப்படைத்தன்மையுடன் பேணப்படும் வர்த்தக சூழலை உருவாக்குவதன் ஊடாக இற்றைவரையில் கடைபிடித்து வந்த முறைமைகளை துரித கதியில் முன்னெடுப்பதற்காக தயாராகும் இத்தருணத்தில் கடந்த காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தின் பாதையை வெளிக்கொணரும் வருடாந்த ஆய்வறிக்கையை சமர்ப்பிக்கப்படுகின்றமையும் மகிழ்ச்சியளிக்கின்றது.

பல யுகங்களாக காணப்பட்ட பல்வேறு மோதல்கள், தடைகளை மீறி மேலும் எதிர் நீச்சல் அடிக்கும் தறுவாயில் போட்டித் தன்மை வாய்ந்த சந்தையில் தனிமைப்படுத்தப்பட்ட அம்சங்களை நிவர்த்தி செய்து ஆசியாவின் முன்னோடி என்று பெற்ற நன்மதிப்பை எதிர்காலத்தில் அகிலத்தின் முன்னோடியாகும் கனவினை நனவாக்கும் பயணத்தை ஆரம்பித்துள்ள இத்தருணத்தில் அதனை வெற்றியடையச் செய்வதற்கு இந்த யுகத்தின் விசேட பணிக்காக அர்ப்பணித்த நல்லாட்சி இணக்க அரசாங்க ஆட்சியின் முக்கிய காரணகர்த்தாவாகிய அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களை அன்போடும் கௌரவத்தோடும் நினைவு கூருகின்றேன். அத்துடன் அவரது ஆசீர்வாதத்தோடு எமது பயணத்தை வழிநடத்தி நித்தமும் பங்களிப்புச் செய்து எம்மை சிறந்த வழியில் இட்டுச் செல்லும் கௌரவ பாராளுமன்ற மறுசீரமைப்பு, வெகுசன ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக அவர்களையும் நன்றியுணர்வுடன் நினைவு கூருகின்றேன்.

கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்கான முனைப்பிற்கு வலிமையூட்டி நிறுவனத்தின் செயல்முறைகளை மேற்பார்வை செய்து செல்ல வேண்டிய சரியான பாதையை எடுத்துக் கூறி எம்மோடு நம்பிக்கையோடு செயலாற்றும் அமைச்சின் செயலாளர் திரு. வஜிர நாரம்பனாவ அவர்களையும் எமது கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு எனக்களித்த சக்தியையும் நினைவு கூருகின்றேன்.

ஆசியாவின் முன்னோடி பயணத்திற்கு வலிமையூட்டி கூட்டுப் பொறுப்பாண்மை மனப்பாங்குடன் கைகோர்த்து வலிமையான அடித்தளத்தை இட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் பணியாட் தொகுதியினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ரவீந்திர யசலால் கலன்சூரிய**
தலைவர்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

# 2013

## பணிப்பாளர் சபை

தலைவர்
**திரு. ஜயம்பதி பண்டார ஹீன்கென்த**

உதவித் தலைவர்
**திரு. எச். கே. டீ. லக்ஷ்மன் காமினி**

பணிப்பாளர்கள்

1. திரு. அமரபால கமகே
2. திருமதி டீ. ஜீ. என். குமாரி
3. திரு. என். எச். எம். சித்ரானன்த
4. திரு. நன்தசிரி களுபோவில
5. திருமதி ராஜனீ அதபத்து
   (2013. 07. 02 திகதியிலிருந்து நியமிக்கப்பட்டவர்)

# 2013
# நிறைவேற்று அதிகாரிகள்

**பொது முகாமையாளர்**
திரு. ஆர். எம். என். மொனறவில

**நிதி முகாமையாளர்**
திரு. என். டி. பிரியங்கர குமார

**வேலை முகாமையாளர்**
திரு. எஸ். டீ. கருனாரத்ன

**விநியோக முகாமையாளர்**
திரு. ஈ. வீ. கே. கீர்த்திரத்ன

**சந்தைப்படுத்தல் முகாமையாளர்**
திரு. எம். டீ. ஜே. பெரேரா

**முகாமையாளர் (நிர்வாக, மனித வளங்கள் அபிவிருத்தி)**
திரு. ஆர். எம். யூ. டி. பண்டார

**முகாமையாளர் (செயல்முறை)**
திரு. எல். ஜீ. ஹேவாவிதாரண

**பிரதி வேலை முகாமையாளர்**
திரு. டி. எம். எம். பீ. திசாநாயக்க

**பிரதி வேலை முகாமையாளர்**
திரு. டீ. எம். ஆர். என். தென்னகோன்

**பிரதி நிதி முகாமையாளர்**
திரு. கே. எச். திலகரத்ன

**முகாமையாளர் (காகிதாதிகள் தொழிற்சாலை)**
திரு. எல். டீ. பிரேமசிறி

**உதவி வேலை முகாமையாளர் (மதிப்பீடு)**
திரு. கே. டி. டீ. சந்திரசிறி

**உதவி வேலை முகாமையாளர் (பாதுகாப்பு அச்சிடல் பிரிவு)**
திரு. எம். ஏ. கொதலாவல

**உதவி வேலை முகாமையாளர் (களஞ்சியசாலை)**
திரு. எம். எஸ். எல். குருப்பு

**உதவி வேலை முகாமையாளர் (செயற்பாடு)**
திரு. எஸ். டி. குமாரசிங்க

**உதவி வேலை முகாமையாளர் (புத்தகம் கட்டுதல்)**
திரு. எம். ஏ. சாந்த குமார

**உதவி வேலை முகாமையாளர் (பராமரிப்பு)**
திரு. கே. ஏ. ஏ. டி. ஜுட் பீட்டர்

**உதவி வேலை முகாமையாளர் (லிதோ)**
திரு. பீ. கே. டீ. மஹிந்த

**உதவி முகாமையாளர் (விற்பனை)**
திரு. எச். ஆர். குணசேகர

**கணக்காளர்**
திரு. எம். ஆர். பீ. ஜயவர்தன

**கணக்காளர்**
திரு. டப்ளியு. எல். தெனியகே

**உள்ளக கணக்காய்வாளர்**
திரு. ஏ. எஸ். சீ. சில்வா

**உதவி முகாமையாளர் (பாதுகாப்பு)**
திரு. டப்ளியு. டப்ளியு. எம். ஆரச்சிகே

**உதவி முகாமையாளர் (நிர்வாக, மனித வளங்கள் அபிவிருத்தி)**
திரு. கே. எச். பீ. சஜீவ

**நிறுவன முகாமையாளர் (ஒப்பந்தம்)**
திரு. டி. எம். எச். வை. திசாநாயக்க

# பணிப்பாளர் சபையின் அறிக்கை

# 2013

நிதிச் சட்டம் இலக்கம் 38, 1971, 14 வது பிரிவின்படி, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை 31.12.2013 இல் முடிவடைந்த ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை உள்ளடக்கிய 45 ஆவது அறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

மதிப்பீட்டு ஆண்டில் 09 சபைக்கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 01. உற்பத்தி


### 1.1 பாடசாலை பாட நூல்கள், எம்பிலு நூல்கள்

### 1.1.1 பாடசாலை நூல்களை அச்சிடுதல்

பாடசாலை பாட நூல்களை அச்சிடும் அடிப்படை நோக்கத்துடன் கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனம் திறந்த பொருளாதாரம் அறிமுகம் செய்யப்பட்டதோடு ஏனைய உற்பத்தி பணிகளையும் மேற்கொள்ள அதன் செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளது. இதன்படி, கல்வி வெளியீட்டு திணைக்களத்திடமிருந்து பணிக்கட்டளைகளை பெறுவதற்கான கேள்விகளில் கூட்டுத்தாபனம் போட்டியிடவேண்டி நேரிட்டது. ஆனால் 2013ம் ஆண்டில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் கேள்வி நடைமுறைக்கு அப்பாற்பட்டதாக 7.611 மில்லியன் பாட நூல்களையும் கேள்வி நடைமுறையின் கீழ் மற்றுமொரு தொகுதி நூல்களையும் எம்பிலு திட்டத்தின் கீழ் அச்சிடும் பொறுப்பை தந்தது. இதன் பயனாக 8.546 மில்லியன் பிரதிகளை விநியோகித்ததன் மூலம் கூட்டுத்தாபனம் 758.335 மில்லியன் ரூபாவை சம்பாதித்தது.


2011 ஆம் ஆண்டு, 2012 ஆம் ஆண்டு ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் மதிப்பீட்டு ஆண்டில் பாடசாலை நூல்களையும் வேறு தொகுதி நூல்களையும் அச்சிடுவதன் மூலம் கிடைத்த வருமானம் பின்வருமாறு:

| பாடசாலை பாடநூல்கள் | 2011 ('000) | 2012 ('000) | 2013 ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 7,611 | 7,905 | 8,546 |
| வருமானம் - ரூபா | 646,480 | 666,223 | 758,335 |




### 1.2 ஏனைய அச்சு வேலைகள்

அறநெறி பாடசாலை நூல்கள், பாதுகாப்பு அச்சு வேலைகள் (லொத்தர் சீட்டுக்கள், ரிதீரேக்கா, வங்கிவைப்புச் சான்றிதழ்கள், தபால் அலுவலக லேபல்கள், விமான நிலைய சுப்பர் சீட்டிழுப்பு) ஏனைய அரசாங்க அச்சுவேலைகள். மதிப்பீட்டு ஆண்டில் அறிவுரைகள் செயற்படுத்தப்பட்டன. இதற்கு மேலாக, தனியார் துறை நிறுவனங்களின் பல்வேறு பணிகளான நாட்குறிப்பேடுகள், நாட்காட்டிகள் ஆகியனவும் அச்சிடப்பட்டன. கூட்டுத்தாபனத்தினால் பூர்த்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்ட சில விசேட அச்சுப்பணிகளாவன.





### 1.2.1 பாதுகாப்பு அச்சிடும் பணி

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத்த லொத்தர் சீட்டுக்கள் கடந்த 39 வருடங்களாக அச்சிடப்பட்டு வருகின்றன. இந்த வருடமும் இப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், விமான சுப்பர் சீட்டிழுப்பு, சீட்டுக்கள் அச்சிடப்பட்டன. 243 மில்லியன் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதன் மூலம் ரூ. 136.1 மில்லியன் வருமானம் 2013 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்று பணிக்கட்டளைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டன.

லொத்தர் அச்சிடுவதில் இருந்து கிடைத்த வருமானம், அச்சிடப்பட்ட சீட்டுக்களின் தொகை ஆகியன பின்வருமாறு:

| லொத்தர் அச்சிடுதல் | 2011 ('000) | 2012 ('000) | 2013 ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 212,535 | 256,195 | 242,991 |
| வருமானம் - ரூபா | 119,543 | 145,701 | 136,124 |




### 1.2.2. விசேட அச்சு வேலைகள்

அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள் மற்றும் தனியார் துறைகளிடமிருந்தும் அச்சு வேலைக்கான கட்டளைகள் கிடைத்தன. விசேட அச்சு வேலைகளில் பின்வரும் பணிகளும் அடங்கியிருந்தன.


01. பல்வேறு நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகள்.
02. அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அச்சுப் பணிகள்.
03. பல்வேறு நிறுவனங்களுக்கான நாட்காட்டிகள் மற்றும் நாட்குறிப்புகள்
04. பல்கலைக்கழக சான்றிதழ்கள்.
05. தேசிய விலங்கியல் பூங்கா- விற்பனைச் சீட்டுகள்.
06. திரைப்பட அனுமதிச் சீட்டுக்கள்.
07. சமுர்த்தி அதிகார சபையின் அச்சு வேலைகள்.
08. தேசிய சேமிப்பு வங்கி - ரிதீரேக்கா சான்றிதழ்கள் உட்பட தேசிய சேமிப்பு வங்கியின் அச்சு வேலைகள்.
09. மேல் மாகாண கல்வித் திணைக்களத்துக்கான பாடசாலை வருட இறுதி பரீட்சை வினாத்தாள்கள்.


மதிப்பீட்டு ஆண்டில் ஏனைய அச்சு வேலைகள் மூலம் கூட்டுத்தாபனம் 799 மில்லியன் ரூபாவை சம்பாதித்தது.

### 1.3 அப்பியாச கொப்பிகளையும் ஏனைய காகிதாதிகளையும் தயாரித்தல்.

மதிப்பீட்டு ஆண்டில் உற்பத்தியும் 2010, 2011 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டு புள்ளி விபரங்கள்.

| அப்பியாசக் கொப்பிகளும் ஏனைய காகிதாதியும் | 2011 ('000) | 2012 ('000) | 2013 ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 8,162 | 10,571 | 10,141 |
| வருமானம் - ரூபா | 193,746 | 234,824 | 228,563 |








அப்பியாசக் கொப்பிகள் மற்றும் CR கொப்பிகளுக்குத் தேவையான தாள்கள் குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கப் பெறாததன் காரணமாக 2013ம் ஆண்டுக்கான நியமித்த உற்பத்திக்கான இலங்கை அண்மிக்க முடியவில்லை.

## 02. விற்பனை/சந்தைப்படுத்தல்

மதிப்பீட்டு ஆண்டில் பிரதானமான போட்டி நிறுவனங்களுடன் இருந்த விலை வித்தியாசம் ஆகக் குறைவான மட்டத்திற்கு வந்தமையினால் மொத்த வருமானத்தை அதிகரித்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

| வருடம் | 2011 ('000) | 2012 ('000) | 2013 ('000) |
|---|---|---|---|
| மொத்த விற்பனை பெறுமதி | 186,856 | 239,075 | 235,593 |




முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் மொத்த வருமானமானது மதிப்பீட்டு ஆண்டில் ரூ. 3,482,140.09 இனால் குறைவடைந்துள்ளது. கடந்த சில வருடங்களாக ஒரே நிலையில் இருந்த 20% க்கு அண்மித்த வளர்ச்சியானது வீழ்ச்சியடைந்துள்ளது.

இவ்வீழ்ச்சிக்கு 02 பிரதான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

01. சில பிரதான உற்பத்திகளின் மூலப்பொருட்களின் கிரய அதிகரிப்பால் ஏனைய போட்டி நிறுவனங்களுடன் இருந்த விலை வித்தியாசம் காரணமாக எதிர்ப்பார்க்கப்பட்ட கோரல்கள் சிலவற்றை முழுமையாக பெற்றுக்கொள்ள முடியாதமையாலும் விற்பனை நிலையங்களின் வருமானம் வீழ்ச்சியடைந்தது.

02. பிரதான மூலப்பொருட்கள் இல்லாமையினாலும் விநியோகித்தலில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவும் கட்டளைக்குரிய விநியோகத்தை பூரணப்படுத்த முடியாமல் போனது.

## 03. வெளியீடுகள்

நடைமுறையிலுள்ள இருப்புக்களை விநியோகித்ததன் மூலமே மதிப்பீட்டு ஆண்டில் வருமானம் உழைக்கப்பட்டதே தவிர புதிய உற்பத்திகள் எதுவும் அச்சிடப்படவில்லை.

பழைய வெளியீடுகள் பிரதேச செயலக மட்டத்தில் நூலகங்களுக்கு இலவசமாக பங்கீடு செய்யும் திட்டத்தை தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதன் மூலம் வெளியீட்டு அளவை குறைத்துக் கொள்ளவும் அதன் பிறகு புதிய வெளியீடுகளை முன்வைப்பதற்கும் திட்டமிடப்பட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

## 04. நிலையான சொத்துக்கள்

கூட்டுத்தாபனத்தின் நிலையான சொத்துக்கள் 2013 ஆம் ஆண்டு முடிவில் ரூபா 365,512,555.48 ஆகும். இதன் எழுதப்பட்ட பெறுமதி ரூபா. 99,983,204.06 ஆகும். முந்திய வருடத்துடன் (2012) ஒப்பிடுகையில் ரூபா. 337,870,818.38 ஆகும். எழுதப்பட்ட பெறுமதி ரூபா. 93,163,111.02 ஆகும்.

| நிலையான சொத்துக்கள் | 2011 ('000) | 2012 ('000) | 2013 ('000) |
|---|---|---|---|
| திறந்த பெறுமதி (செலவினத்தில்) | 301,082 | 322,144 | 337,870 |
| திறந்த பெறுமதி (செலவினத்தில்) | 322,144 | 337,870 | 365,512 |
| எழுதப்பட்ட பெறுமதி | 89,097 | 93,163 | 99,983 |


## 05. வரி பொறுப்பு

மேலும், வருமான வரியாக ரூபா. 51,064,333 பங்கு இலாப வரியாக ரூபா. 3,595,431 2012/2013 மதிப்பீட்டு ஆண்டுக்கான 2013ஆம் வருட இறுதி கணக்குகளில் கூட்டுத்தாபனத்தினால் பதியப்பட்டுள்ளது.

| வரி பொறுப்பு | 2011 ('000) | 2012 ('000) | 2013 ('000) |
|---|---|---|---|
| வருமான வரி | 52,082 | 39,359 | 30,828 |
| பங்குலாப வரி | 4,606 | 12,899 | 5,454 |
| மொத்தம் | 56,688 | 52,258 | 36,282 |

## 06. இலாபம்


2013 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வரிக்கு முந்திய இலாபம் 132,064,772,54 ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் கிடைத்த வரிக்கு முந்திய இலாபம் 140,567,143,44 ரூபாவாகும்.




| இலாபம் | 2011 ('000) | 2012 ('000) | 2013 ('000) |
|---|---|---|---|
| வரிக்கு முந்திய இலாபம் | 133,688 | 140,567 | 78,095 |
| வரி செலுத்திய பின்னர் நிகர இலாபம் | 77,000 | 88,309 | 41,813 |

## 07. போனஸ்

தகுதி வாய்ந்த ஊழியர்களுக்கு வருடாந்த போனஸ்சாக இரண்டு மாத சம்பளத்திற்கு சமமான தொகையான 35,259,829.28 ரூபா வழங்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தத் தொகை 16% சதவீதம் அதிகமானது.




| போனஸ் | 2011 ('000) | 2012 ('000) | 2013 ('000) |
|---|---|---|---|
| ரூ. | 27,928 | 30,491 | 35,259 |

## 08. சேமநலன்

முன்னைய வருடத்தை போன்றே இந்த வருடமும் ஊழியர்களுக்கு சேமநல வசதிகள் பின்வருமாறு வழங்கப்பட்டன. இதற்காக கூட்டுத்தாபனம் 86.8 மில்லியன் ரூபாவை செலவிட்டது.

| | சேமநலன் | 2011 ('000) | 2012 ('000) | 2013 ('000) |
|---|---|---|---|---|
| 01. | ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதிகள் | 2,093 | 2,545 | 3,064 |
| 02. | ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு | 5,274 | 5,516 | 9,367 |
| 03. | மருத்துவ வசதிகள் | 2,854 | 4,567 | 5,541 |
| 04. | பல்வேறு சேமநல வசதிகள் | 5,556 | 9,424 | 17,845 |
| 05. | ஊழியர் இழப்பீட்டு காப்புறுதி | 176 | 191 | - |
| 06. | சகல ஊழியர்களுக்கும் காகிதாதிகளுக்கான கொடை வவுச்சர்கள். | 997 | 1,021 | 1,132 |
| 07. | ஊழியர்களுக்கான போனஸ் | 27,928 | 30,491 | 35,259 |
| 08. | ஊழியர்களின் வீடமைப்பு கடன் வட்டியை மீளளித்தல் | 4,046 | 3,918 | 4,207 |
| 09. | பயன்படுத்தப்படாத விடுமுறைகளுக்கான கொடுப்பனவு. | 8,570 | 9,170 | 11,319 |
| | **மொத்தம்** | **57,494** | **66,843** | **87,734** |

## 09. ஆளணி

நடப்பு வருடத்தில் கூட்டுத்தாபம ஊழியர்களின் எண்ணிக்கை 708 ஆகும். அவற்றின் தரப் பிரிப்புடன் கூடிய அட்டவணையின் மூலம் லின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பிரதான தொழிற்சாலை | 367 |
| அலுவலகம் | 104 |
| காகிதாதி தொழிற்சாலை | 32 |
| பாதுகாப்பு பிரிவு | 49 |
| விற்பனை நிலையங்கள் | 47 |
| சங்கராஜ மாவத்தை மொத்த விற்பனை களஞ்சியங்கள் | 05 |
| சமயா சமய, ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் | 64 |
| நாட்கூலி தொழிலாளர்கள் | 22 |
| ஒப்பந்த சேவை அடிப்படையிலான தொழிலாளர்கள் | 18 |

09.1 மதிப்பீட்டு ஆண்டின் போது பின்வரும் நிறைவேற்று அதிகாரிகள் சேவையில் இருந்து விலகிக் கொண்டார்கள் - 01

| பெயர் / பதவி | திகதி |
|---|---|
| 01. திருமதி ஏ. டி. என். எச். கருனாபால (விநியோக அதிகாரி) | 2013. 05. 02 |

## அங்கீகரித்தல்

கூட்டுத்தாபனத்தின் சகல ஊழியர்களும் கூட்டுத்தாபனத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு மனப்பூர்வமான ஒத்துழைப்பை தந்தமைக்காக தலைவரும், பணிப்பாளர்களும் நன்றி கூறுகிறார்கள்.

வெற்றிகரமான திட்டத்திற்கு வழிகாட்டுதலும் ஆதரவும் அளித்த கௌரவ ஊடக, தகவல்துறை அமைச்சருக்கும், ஊடக அமைச்சருக்கும் திட்டத்தை அமுல் செய்வதில் தொடர்ச்சியான ஆதரவை தந்த அமைச்சின் செயலாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் தலைவரும், பணிப்பாளர்களும் நன்றி கூறுகின்றார்கள்.

எதிர்வரும் ஆண்டுகளில் இதே ஒத்துழைப்பு வழங்கப்படுமென்று முகாமைத்துவம் நம்புகிறது.

**ரவீந்திர யசலால் கலன்சூரிய**
தலைவர்

# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் 2013 ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

# 2013

## 1. கூட்டிணைப்பு பற்றிய தகவல்கள்

### 1.1 பொது

அரசாங்க அச்சக நிதிக்கூட்டுத்தாபனம் 1968 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் 1968 ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் பணிப்பாளர் சபையிடம் கையளிக்கப்பட்டது. இது பாதுக்க, பானலுவவில் அமைந்துள்ளது.

### 1.2 முக்கிய செயற்பாடுகளும் செயற்பாட்டின் தன்மையும்

கூட்டுத்தாபனத்தின் முக்கிய செயற்பாடுகளாக பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுதல், பயிற்சிக் கொப்பிகளை தயாரித்தல் மற்றும் ஏனைய அச்சுப் பணிகள் என்பவற்றை குறிப்பிடலாம்.

## 2. தயாரிப்பின் அடிப்படை

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு இணைவாக இகநி மற்றும் இநிதிபி என்பவற்றிற்கு ஏற்ப நிதி நிலைமை கூற்றுக்கள், விரிவான வருமான கூற்று, நிதி மாற்றங்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள், கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.1 மதிப்பீட்டு அடிப்படை

நிதிக்கூற்றுக்கள் திரட்டல் முறை மற்றும் தொன்மை கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.2 நிறுவன தொடர்ச்சி

கூட்டுத்தாபனம் தொடர்ந்து இயங்கும் ஆளுமையை கொண்டுள்ளதா என்பதை கருத்திற்கொண்டு பணிப்பாளர் சபை மதிப்பீடு செய்துள்ளதுடன் முடிவுறுத்துவதோ அல்லது செயற்பாடுகளை நிறுத்துவதோ சபையின் நோக்கமல்ல.

# 3. சிறப்பான கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்

## 3.1 சொத்து, பொறி மற்றும் இயந்திரங்கள்

சொத்து, பொறி மற்றும் இயந்திரங்கள் தேய்மான சேர்க்கப்பட்ட தேறிய கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் இன்னும் பாவனையில் உள்ளன**

| சொத்து பிரிவு | மொத்த கிரயம் (ரூ.) | முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்தின் பெறுமதி (ரூ.) | மொத்த சொத்தின் பெறுமதியில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்தின் பெறுமதி % |
|---|---|---|---|
| கட்டிடங்கள் | 37,182,060 | 6,683,778 | 17 |
| பொறிகளும் இயந்திரங்களும் | 215,074,630 | 106,079,965 | 49 |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 4,336,576 | 3,424,420 | 78 |
| மோட்டார் வாகனங்கள் | 46,968,763 | 22,609,313 | 48 |
| மோட்டார் சைக்கிள்கள் | 422,354 | 422,354 | 100 |
| அலுவலக தளபாடங்கள் | 27,988,508 | 10,482,672 | 37 |
| சைக்கிள்கள் மற்றும் கைப்பணிப்பொருட்கள் | 1,005,978 | 1,005,978 | 100 |
| மின்னியல் மீள் பொருத்துகைகள் | 2,572,950 | 2,572,950 | 100 |
| கணினி மென்பொருள் | 3,394,949 | 1,679,326 | 49 |
| லொத்தர் சீட்டுக்களின் பார்கோட் ரீடருக்கான கணினி முறைமைகள் | 24,156,081 | 18,744,581 | 77 |

2013.12.31 இல் உள்ளவாறு மேற்குறிப்பிட்டவாறு தொகுக்கப்பட்ட சொத்துக்களின் எஞ்சிய ஆயுட்காலம் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் சரியான கணக்கீட்டு சீராக்கலுக்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 3.1.1 தேய்மானம்

மதிப்பீடு செய்யப்பட்ட சொத்து, பொறிகள் மற்றும் இயந்திரங்களின் பயன்தகு ஆயுட்காலம் மீது நேரடி தேய்மான அடிப்படையில் தேய்மானம் கணக்கிடப்படும்.

நிகழ் மற்றும் ஒப்பீட்டு ஆண்டுகளுக்கான மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 40 வருடங்கள் |
| பொறிகளும் இயந்திரங்களும் | 13.33 வருடங்கள் |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் | 4 வருடங்கள் |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 10 வருடங்கள் |
| அலுவலக தளபாடங்கள் | 10 வருடங்கள் |
| கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 3 வருடங்கள் |
| தொழிற்சாலை உபகரணங்கள் மற்றும் வகைகள் | 4 வருடங்கள் |

## 3.2 பொருட் பட்டியல்

பொருட்பட்டியலானது குறைந்த கிரயம் மற்றும் தேறிய அட்டுறு பெறுமதியில் கணிப்பிடப்பட்டுள்ளது.

## 3.3 வரிவிதிப்பு

2006 ஆம் ஆண்டு 10 இலக்க உந்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் பொறுப்பு முறை அடிப்படையில் வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3.4 காசும் காசுக்கு சமமானவைகளும்

# 4. நிதி கருவிகள் - ஆரம்ப அங்கீகாரம் மற்றும் தொடர்ச்சியான அளவீடு

## 4.1 நிதிச் சொத்துக்கள்

### 4.1.1 நிதிச் சொத்துக்களின் சேதம்

2.5 வியாபார வருமதிகளில் காட்டப்பட்டுள்ளன.

## 4.2 நிதி பொறுப்புக்கள்

காணி, கட்டிடங்கள் மற்றும் நிலையான இயந்திரங்களை ஈடாக வைத்து மக்கள் வங்கியிடமிருந்து கடன் அடிப்படையில் பெறப்பட்ட நிதி மூலம் கூட்டுத்தாபனத்தில் நடைமுறையில் உள்ளது.

கடந்த காலத்திற்கான ஊழியர் நம்பிக்கை நிதியம் தொடர்பான தண்டக் கட்டணம் பொறுப்பாக காணப்படுகிறது.

### 4.2.1 ஐயப்பாட்டு பொறுப்பு

தொழில் நியாயாதிக்கச் சபையின் தீர்மானங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 7 மேன்முறையீடு தொடர்பிலான ஐயப்பாட்டு பொறுப்பு காணப்படுகிறது. இதில் 3 முறைப்பாடுகள் மாவட்ட நீதி மன்றங்களுக்கும் ஒரு முறைப்பாடு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குமானது.

# 5. ஓய்வு பயன் பொறுப்புறுதிகள்

1983 ஆம் ஆண்டு 12 இலக்க பணிக்கொடை கொடுப்பனவு பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனம் பணிக்கொடையை செலுத்த வேண்டிய பொறுப்பை கொண்டுள்ளது. 2013.12.31 இல் உள்ளவாறு ஏற்பாடுகளுக்கு இணையான தனி நிதியம் திரட்டப்படாத போதும் பணிக்கொடை கொடுப்பனவு நிலுவை இன்றி செலுத்தப்பட்டது.

# 6. வருமானமும் செலவினங்களும்

## 6.1 வருமான அங்கீகாரம்

சகல வருமானமும் தொன்மை கிரய அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### வட்டி வருமானம்

கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு 10% வட்டி அறவிடப்பட்டுள்ளது.

## 6.2 செலவினங்கள்

ஆண்டில் ஈட்டப்படும் இலாபத்தில் வியாபாரத்தை நடத்துவதற்கு ஏற்கப்பட்ட சகல செலவினங்களும் குறைக்கப்பட்டுள்ளன.

## 6.3 கடன் பெறுவதற்கான கிரயம்

ஏற்கப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட சகல கடன் பெறுவதற்கான கிரயங்களும் செலவினங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
# 2013ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | குறிப்பு | 2013<br>ரூ. | 2012<br>ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் | 14 | 99,983,204 | 93,163,111 |
| | | **99,983,204** | **93,163,111** |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | |
| பொருட்பட்டியல்கள் | 15 | 307,846,607 | 346,038,206 |
| வியாபார வருமதிகள் | 16 | 733,280,245 | 476,781,757 |
| ஏனைய வருமதிகள் | 17 | 143,145,763 | 101,718,337 |
| முற்பண கொடுப்பனவு | | 92,221 | 749,915 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 18 | 4,659,788 | 6,588,506 |
| | | 1,189,024,624 | 931,876,721 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,289,007,828** | **1,025,039,832** |
| **ஒப்புரவுகளும் பொறுப்புக்களும்** | | | |
| வெளியிடப்பட்ட மூலதனம் | | 15,000,000 | 15,000,000 |
| ஒதுக்கங்கள் | | 15,003,633 | 15,003,633 |
| இருப்பு வருமானங்கள் | | 283,100,175 | 337,811,585 |
| **மொத்த ஒப்புரவுகள்** | | **313,103,808** | **367,815,218** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வு பயன் பொறுப்புறுதிகள் | | 129,410,948 | 110,400,404 |
| கடன் பெறுவனவுகளுக்கான வட்டி | | 6,167,715 | 12,200,004 |
| | | **135,578,663** | **122,600,408** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார சென்மதிகள் | 19 | 310,892,870 | 106,176,731 |
| ஏனைய சென்மதிகள் | 20 | 45,041,289 | 92,094,629 |
| கடன் பெறுவனவுகளுக்கான வட்டி | | 437,919,685 | 296,586,575 |
| வங்கி மேலதிகப் பற்று | | 46,471,513 | 39,766,271 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **840,325,357** | **534,624,206** |
| **மொத்த ஒப்பரவுகளும் பொறுப்புக்களும்** | | **1,289,007,828** | **1,025,039,832** |

இந்நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் தேவைகளுக்கு இணைவாக உள்ளதென இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

**என். டி. பிரியன்கர குமார**
நிதி முகாமையாளர்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பேற்க வேண்டும். இந்நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ளன. பக்கம் 67, 68, 69 ஆகியவற்றிலுள்ள நிதிக் கொள்கைகள், பக்கம் 71, 72 மற்றும் 76 தொடக்கம் 78 வரையிலான படிவங்கள் நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைந்த பகுதியாக காட்டப்பட்டுள்ளன.

**பீ.ஜீ.தஸநாயக்க**
தவிசாளர்/பணிப்பாளர்

**எச்.கே.டி.எல் காமினி**
பிரதி தவிசாளர்/பணிப்பாளர்

| | 2013 ரூ. | 2012 ரூ. |
|---|---|---|
| **15. பொருட்பட்டியல்கள்** | | |
| மூலப்பொருட்கள் | 158,194,164 | 190,516,533 |
| பாவனைப்பொருட்கள் | 5,767,154 | 5,017,022 |
| உதிரிப்பாகங்கள் | 50,815,440 | 50,050,009 |
| கட்டுமானப்பொருட்கள் | 717,350 | 1,459,621 |
| முடிவுப்பொருட்கள் | 74,557,352 | 79,014,565 |
| உற்பத்தியாகும் பொருட்கள் | 17,795,146 | 19,980,456 |
| | **307,846,606** | **346,038,206** |

| | 2013 ரூ | 2012 ரூ. |
|---|---|---|
| **16. வியாபார பெறுவனவுகள்** | | |
| வியாபார கடன்படுநர் | 750,607,688 | 514,427,534 |
| கழிக்க – அறிவிட முடியாக்கடன் ஏற்பாடு | (18,765,192) | (38,582,065) |
| ஏனைய கடன்கொடுநர் | 1,437,749 | 936,287 |
| | **733,280,245** | **476,781,756** |

| | 2013 Rs. | 2012 Rs. |
|---|---|---|
| **17. ஏனைய பெறுவனவுகள்** | | |
| பணியாட்தொகுதி கடன் மற்றும் முற்பணம் (குறிப்பு 17.1) | 24,803,473 | 17,011,320 |
| வைப்புக்கள் மற்றும் பெறுவனவுகள் (குறிப்பு 17.2) | 6,066,344 | 6,122,447 |
| விற்பனை கட்டுப்பாட்டு கணக்குகள் | (2,288,897) | - |
| வங்கி கடன் - தொங்கல் கணக்கு | 114,564,843 | 78,584,571 |
| | **143,145,763** | **101,718,338** |

| | 2013 Rs. | 2012 Rs. |
|---|---|---|
| **17.1 பணியாட்தொகுதி கடன் மற்றும் முற்பணம்** | | |
| கடன்கொடுநர் முற்பண கணக்கு | 1,680,649 | - |
| இடர் கடன்கள் | 20,979,465 | 15,676,776 |
| பண்டிகை முற்பணம் | 2,132,913 | 1,280,413 |
| பணியாட்தொகுதி சம்பள முற்பணம் | 10,445 | 54,130 |
| | **24,803,472** | **17,011,319** |

| | 2013 Rs. | 2012 Rs. |
|---|---|---|
| **17.2 வைப்புக்களும் பெறுவனவுகளும்** | | |
| வைப்புக்கள் பெறுவனவுகள் | 5,546,088 | 5,676,697 |
| சேர்க்க. ஏனைய பெறுவனவுகள் | 520,256 | 445,750 |
| | **6,066,344** | **6,122,447** |

| | 2013 Rs. | 2012 Rs. |
|---|---|---|
| **18. காசும் காசுக்கு சமமானவைகளும்** | | |
| வங்கியிலுள்ள காசு | 1,463,800.50 | 2,984,267.00 |
| வழியிடைப்பணம் | 3,090,537.43 | 3,379,472.00 |
| கையிலுள்ள காசு | 105,450.00 | 224,767.00 |
| | **4,659,787.93** | **6,588,506.00** |

காசுப்பாய்ச்சல், காசும் காசுக்கு சமமானவைகள் கூற்றின் பயன்பாட்டிற்காக பின்வருவன உள்ளடக்கப்படுகின்றன

| | 2013 | 2012 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| வங்கியிலுள்ள காசு | 1,463,800.50 | 2,984,267.00 |
| வழியிடைப்பணம் | 3,090,537.43 | 3,379,472.00 |
| கையிலுள்ள காசு | 105,450.00 | 224,767.00 |
| | 4,659,787.93 | 6,588,506.00 |
| வங்கி மேலதிகப்பற்று | (46,471,513.00) | (39,766,271.00) |
| | **(41,811,725.07)** | **(33,177,765.00)** |

| | 2013 | 2012 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| **19. வியாபார கொடுப்பனவுகள்** | | |
| வியாபார கடன்கொடுநர் | 54,174,102.00 | 50,483,171.00 |
| கடன்கொடுநர் முற்பண கணக்கு | - | 2,297,182.00 |
| ஏனைய கடன்கொடுநர் | 74,259,098.00 | 1,086,100.00 |
| உந்நாட்டு இறைவரித்திணைக்களம் | 181,144,726.00 | 52,257,668.00 |
| விற்பனை முற்பணம் | 1,314,944.00 | 52,610.00 |
| | **310,892,870.00** | **106,176,731.00** |

| | 2013 | 2012 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| **20. ஏனைய கொடுப்பனவுகள்** | | |
| திரண்ட செலவு | 42,566,766.00 | 90,358,769.00 |
| வைப்பு கொடுப்பனவு | 2,474,523.00 | 1,735,861.00 |
| | **45,041,289.00** | **92,094,630.00** |

# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
# 2013ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | 2013<br>ரூ. | 2012<br>ரூ. |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினால் காசுப்பாய்ச்சல்** | 78,095,872 | 140,567,143 |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம்/நட்டம் | | |
| ***செம்மையாக்கலுக்காக:*** | | |
| நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானம் | 18,715,828 | 13,828,329 |
| முந்திய வருட செம்மையாக்கல் | (94,418,994) | 21,807,219 |
| நிதிச் செலவினங்கள் | 62,548,766 | 57,359,447 |
| வருடம் முழுவதும் பணிக்கொடை ஏற்பாடு | 21,754,712 | 17,038,160 |
| **தொழிற்படு மூலதன மற்றத்துக்கு முந்திய செயற்பாட்டு இலாபம்** | **86,696,184** | **250,600,298** |
| **தொழிற்படு மூலதன விடயங்களின் மாற்றம்** | | |
| (அதிகரிப்பு) பொருட் பட்டியல்களில் குறைப்பு | 38,191,599 | (51,919,058) |
| (அதிகரிப்பு) வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகளின் குறைப்பு | (256,498,488) | (12,841,089) |
| (அதிகரிப்பு)/ஏனைய பெறுவனவுகளின் குறைப்பு | (40,769,732) | (14,840,093) |
| அதிகரிப்பு/ நடைமுறை பொறுப்புக்களின் (குறைப்பு) | 28,775,740 | 37,252,663 |
| **செயற்பாடுகளின் மூலம் ஈட்டப்பட்ட காசு** | **(143,604,697)** | **208,252,721** |
| செலுத்திய வரி | 92,604,587 | (66,456,627) |
| செலுத்திய ஊழியர் ஓய்வு கொடை | (2,744,168) | (3,384,175) |
| செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள் | **(53,744,278)** | **138,411,919** |
| **முதலீட்டு செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள்** | | |
| பிபிஈ கொள்வனவு | (27,641,737) | (17,894,164) |
| **முதலீட்டு செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல்கள்** | **(27,641,737)** | **(17,894,164)** |
| நிதிச் செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள் | | |
| கடன்பெறுவனவுகளுக்கான பெறுவனவுகள்.'.செலுத்துகை | 135,300,821 | (57,402,104) |
| செலுத்திய வட்டி | (62,548,766) | (57,359,447) |
| **முதலீட்டு செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல்கள்** | **72,752,055** | **(114,761,551)** |
| **காசும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு (குறைப்பு)** | **(8,633,959)** | **5,756,203** |
| **தவணை ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவைகள்** | **(33,177,766)** | **(38,933,969)** |
| **தவணை இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகள் (குறிப்பு 18)** | **(41,811,725)** | **(33,177,766)** |

# அரசாங்க அச்சக நிதிக்கூட்டுத்தாபனம்
# 2013ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | வெளியிட்ட மூலதனம் | மூலதன ஒதுக்கம் | பொது ஒதுக்கம் | அபிவிருத்தி ஒதுக்கம் | இருப்பு வருமானம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ.. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **2012 ஜனவரி 01 உள்ளவாறு மீதி** | **1,500,000** | **102,491** | **1,000,000** | **13,901,142** | **227,694,891** | **257,698,524** |
| ஆண்டுக்குரிய இலாபம் / நட்டம் - | - | - | - | - | 88,309,474 | 88,309,474 |
| முந்திய வருட செம்மையாக்கல் - | - | - | - | - | 21,807,219 | 21,807,219 |
| **2012 டிசம்பர் 01 உள்ளவாறு மீதி** | **1,500,000** | **102,491** | **1,000,000** | **13,901,142** | **337,811,584** | **367,815,217** |
| **2013 ஜனவரி 01 உள்ளவாறு மீதி** | 15,000,000 | 102,491 | 1,000,000 | 13,901,142 | 337,811,584 | 367,815,217 |
| ஆண்டுக்குரிய இலாபம் / நட்டம் | | | | | 41,813,401 | 41,813,401 |
| முந்திய வருட செம்மையாக்கல் | | | | | (96,524,810) | (96,524,810) |
| **2013 டிசம்பர் 01 உள்ளவாறு மீதி** | **15,000,000** | **102,491** | **1,000,000** | **13,901,142** | **283,100,175** | **313,103,808** |

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
## 2013ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான விரிவான வருமானக் கூற்றுக்கள்

| | குறிப்புக்கள் | 2013<br>ரூ. | 2012<br>ரூ. |
|---|---|---|---|
| **வருமானம்** | 7 | 1,236,901,899 | 1,209,672,252 |
| விற்பனை செலவு | | (801,809,829) | (754,495,129) |
| **மொத்த இலாபம்** | | 435,092,070 | 455,177,123 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 8 | 6,891,679 | 15,162,617 |
| விநியோக செலவினம் | 9 | (35,755,152) | (52,258,941) |
| நிர்வாக செலவினம் | 10 | (185,818,553) | (160,482,196) |
| ஏனைய செயற்பாட்டு செலவினம் | 11 | (81,262,847) | (60,306,868) |
| செயற்பாட்டு இலாபம் | | 139,147,197 | 197,291,735 |
| நிதி வருமானம் | | 1,497,441 | 634,855 |
| நிதி செலவினம் | 12 | (62,548,766) | 57,359,447 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | 78,095,872 | 140,567,143 |
| வருமான வரி | 13 | (36,282,471) | (52,257,669) |
| **வரிக்கு பிந்திய இலாபம்** | | **41,813,401** | **88,309,474** |

## 2013ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்றுக்கள்

| | 2013<br>ரூ. | 2012<br>ரூ. |
|---|---|---|
| **ஆண்டுக்குரிய இலாபம்** | 41,813,401 | 88,309,474 |
| **ஏனைய விரிவான வருமானம்** | | |
| **ஆண்டுக்குரிய மொத்த விரிவான வருமானம்** | - | - |
| | 41,813,401 | 88,309,474 |

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| **07.** | **வருமானம்** | | |
| | காகிதாதிகள் தொழிற்சாலையின் வருமானம் | 211,757,807 | 214,021,480 |
| | பிரதான அச்சக வருமானம் | | |
| | பாடப்புத்தகங்கள் | 756,660,138 | 711,472,700 |
| | தொழில்கள் | 244,648,596 | 259,124,246 |
| | வெளியீடு | 168,676 | 306,972 |
| | ஏனைய விற்பனை வருமானம் | 23,666,684 | 24,746,855 |
| | | **1,236,901,901** | **1,209,672,253** |
| **08.** | ஏனைய செயற்பாட்டு வருமானம் | | |
| | நானாவித வருமானம் | 6,514,943 | 14,712,574 |
| | கேள்விப்பத்திர வைப்பு | 376,735 | 450,043 |
| | | **6,891,678** | **15,162,617** |
| **09.** | **விநியோக செலவினங்கள்** | | |
| | பொருளாதார சேவை கட்டணங்கள் | 3,127,786 | - |
| | தேசிய கட்டிட வரி | 16,488,493 | 18,454,806 |
| | மோட்டார் வாகன நிர்வாக செலவினம் | 4,320,709 | 4,387,882 |
| | அறவிடமுடியாக்கடன் ஏற்பாடு | 5,131,721 | 24,947,525 |
| | விளம்பரம் | 5,673,521 | 1,491,272 |
| | விற்பனை மேம்படுத்தல் | 970,861 | 2,858,151 |
| | பிரதான விற்பனை நிலையம் | 42,061 | 14,700 |
| | விற்பனை கழிவு | - | 104,606 |
| | | **35,755,152** | **52,258,942** |
| **10.** | **நிர்வாக செலவினங்கள்** | | |
| | வாடகை | 2,832,598 | 2,863,379 |
| | காணி, கட்டிட நிர்வாகம் | 2,772,075 | 2,446,179 |
| | மின்சாரம் | 249,831 | 163,314 |
| | அலுவலக தளபாட பராமரிப்பு | 259,879 | 452,770 |
| | தேய்மானம் - அலுவலக தளபாடம் | 1,581,317 | 1,211,862 |
| | - தளபாடமும் பொருத்துகைகளும் | 89,854 | 73,124 |
| | - கணினி மென்பொருள் | 680,766 | 424,249 |
| | - மோட்டார் சைக்கிள்கள் | | |
| | விகிதங்கள் | 212,963 | 183,822 |
| | நீர் வரி | 40,066 | 27,767 |
| | சம்பளங்களும் படிகளும் | 96,758,524 | 83,529,355 |
| | ஊழியர் மேலதிக நேரம் | 9,320,660 | 7,547,170 |
| | ஊழியர் சேமலாப நிதி | 12,622,832 | 10,504,416 |
| | ஊழியர் நம்பிக்கை நிதி | 3,157,175 | 2,623,883 |
| | ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | 2,569,050 | 2,357,500 |
| | தவிசாளர் ஊதியம் | 720,000 | 720,000 |
| | பிரதி தவிசாளர் ஊதியம் | 135,000 | 135,000 |
| | பணிப்பாளர் சபை கட்டணங்கள் | 213,600 | 360,000 |

| | 2013 | 2012 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| தபால் செலவு | 199,893 | 168,179 |
| தொலைபேசி | 1,378,238 | 1,791,285 |
| அறிவித்தல் மற்றும் வெளியீடுகளை அச்சிடல் | 147,900 | 410,780 |
| போக்குவரத்துச் செலவு மற்றும் இதர கொடுப்பனவு | 1,097,565 | 854,803 |
| பத்திரிகை மற்றும் சஞ்சிகைகள் | 77,630 | 70,680 |
| வெளிநாட்டு சுற்றுப்பயணம்/ஊழியர் பயிற்சி (வெளிநாட்டு) | 2,101,090 | 2,732,090 |
| இணையதளம்/மின்னஞ்சல் | 283,916 | 480,729 |
| அச்சிடலும் காகிதாதிகளும் | 2,650,336 | 6,548,550 |
| கணக்காய்வு கட்டணம் | 1,000,000 | 510,116 |
| களியாட்டம் | 868,443 | 347,819 |
| சட்ட மற்றும் ஆலோசனை சேவை | 1,289,002 | 583,736 |
| மோட்டார் வாகன பராமரிப்பு 25% | 4,320,709 | 4,387,882 |
| பொது அலுவலக செலவினங்கள் | 1,640,747 | 1,738,177 |
| இதர செலவினங்கள் | 816,940 | 573,205 |
| பணிக்கொடை செலவினங்கள் | 21,754,712 | 17,038,160 |
| கேள்வி பத்திர சபை தொழில்நுட்ப கட்டணங்கள் | 575,625 | 530,975 |
| காசு மெய்ப்பாதுகாவலர் கட்டணங்கள் | 73,904 | 186,962 |
| உறுப்பினர் கட்டணங்கள் | 22,500 | 13,700 |
| ஊழியர் பயிற்சி | 240,640 | 483,030 |
| தங்குமிடம் | 1,117,483 | 424,001 |
| பணிப்பாளர் சபை கூட்ட செலவினங்கள் | 540,231 | 118,730 |
| நன்கொடை | 7,761,599 | 2,765,943 |
| வாடகை – மோட்டார் சைக்கிள் | 1,232,414 | 1,381,200 |
| விற்பனை ஆய்வு கட்டணங்கள் | 277,910 | 335,206 |
| காசு போக்குவரத்துக் கட்டணங்கள் | 75,606 | 123,868 |
| கணினி பணியக சேவை கட்டணங்கள் | 57,331 | 258,600 |
| | **185,818,554** | **160,482,196** |

**11. ஏனைய செயற்பாட்டு செலவினங்கள்**

| | | |
|---|---|---|
| ஊழியர் சேமநலன் | 17,845,411 | 9,424,218 |
| ஊழியர் மருத்துவ திட்டம் | 5,541,863 | 4,567,495 |
| வீட்டுக்கடன் வட்டி | 4,207,441 | 3,917,959 |
| ஊழியர் வெகுமதி | 35,259,829 | 30,491,383 |
| விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு | 3,495,000 | - |
| ஊழியர் போக்குவரத்து | 3,064,447 | 2,545,206 |
| விடுமுறை கொடுப்பனவு | 11,319,121 | 9,170,234 |
| செலுத்துனர் வரி | 529,736 | 190,371 |
| | **81,262,848** | **60,306,866** |

**12. வருமான செலவினங்கள்**

| | | |
|---|---|---|
| வங்கி கட்டணங்கள் | 8,214,558 | 7,374,238 |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 6,301,167 | 6,276,304 |
| வங்கி கடன் வட்டி – குறுகிய காலம் | 46,531,402 | 41,085,847 |
| வங்கி கடன் வட்டி – நீண்ட காலம் | 1,501,638 | 2,617,458 |
| தண்டப்பணம் கட்டணங்கள் | - | 5,600 |
| | **62,548,765** | **57,359,447** |

**13. வருமான வரி**

| | | |
|---|---|---|
| ஆண்டுக்குரிய வருமான வரி ஏற்பாடு | 30,828,194 | 39,358,800 |
| பங்கிலாப கருதுகைகள் மீதான வரி ஏற்பாடு | 5,454,277 | 12,898,869 |
| | **36,282,471** | **52,257,669** |

# அரசாங்க அச்சகிக் கூட்டுத்தாபனம்
# 2013ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

**14. சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள்**

| விபரம் | 01.01.2012 உள்ளவாறு | ஆண்டின் சேர்த்தல்கள் / மீள்பெறுமதியிடல்கள் | ஆண்டின் வெளியேற்றங்கள் | 31.12.2012 உள்ளவாறு | ஆரம்ப நிலுவை வித்தியாசம் | ஆண்டின் சேர்த்தல்கள் / மீள்பெறுமதியிடல்கள் | ஆண்டின் வெளியேற்றங்கள் | 31.12.2013 உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| **கிரயத்தில்** | | | | | | | | |
| காணி | 475,126 | - | - | 475,126 | - | - | - | 475,126 |
| கட்டிடம் | 37,182,060 | - | - | 37,182,060 | - | - | - | 37,182,060 |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | 209,002,357 | 211,240 | - | 209,213,597 | - | 5,861,034 | - | 215,074,631 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 4,177,008 | 138,468 | - | 4,315,476 | - | 21,100 | - | 4,336,576 |
| அலுவலக தளபாடங்கள் | 18,482,275 | 4,284,667 | (33,870) | 22,733,072 | - | 5,255,437 | - | 27,988,509 |
| தொழிற்சாலை கருவிகள், வகைகள் | 1,785,681 | 18,800 | - | 1,804,481 | - | 130,095 | - | 1,934,576 |
| இலத்திரனியல் மீள் உள்ளீடுகள் | 2,572,951 | - | - | 2,572,951 | - | - | - | 2,572,951 |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் | 24,037,646 | 10,751,989 | (2,133,611) | 32,656,025 | - | 15,741,071 | - | 48,397,096 |
| கணினி, பாகங்கள் | 24,429,031 | 2,489,000 | - | 26,918,031 | - | 633,000 | - | 27,551,031 |
| **மொத்தம்** | **322,144,135** | **17,894,164** | **(2,167,481)** | **337,870,819** | **-** | **27,641,737** | **-** | **365,512,556** |
| **திரட்டிய தேய்மானம்** | | | | | | | | |
| கட்டிடம் | 25,919,143 | 797,309 | - | 26,716,453 | (34,852) | 762,457 | - | 27,444,057 |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | 143,414,254 | 7,547,630 | - | 150,961,884 | 123,964 | 8,549,986 | - | 159,635,834 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 3,651,552 | 73,124 | - | 3,724,676 | (73,402) | 89,854 | - | 3,741,128 |
| அலுவலக தளபாடங்கள் | 12,682,924 | 1,211,862 | (33,870) | 13,860,915 | (79,119) | 1,581,317 | - | 15,363,113 |
| தொழிற்சாலை கருவிகள், வகைகள் | 1,353,329 | 122,260 | - | 1,475,589 | - | 97,566 | - | 1,573,155 |
| இலத்திரனியல் மீள் உள்ளீடுகள் | 2,572,950 | - | - | 2,572,950 | - | - | - | 2,572,950 |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் | 22,892,586 | 2,149,585 | (2,133,611) | 22,908,560 | 1,811,587 | 5,193,641 | - | 29,913,788 |
| கணினி, பாகங்கள் | 20,562,122 | 1,926,559 | - | 22,486,680 | 357,638 | 2,441,008 | - | 25,285,326 |
| **மொத்தம்** | **233,048,860** | **13,828,329** | **(2,167,481)** | **244,707,707** | **2,105,816** | **18,715,829** | **-** | **265,529,351** |
| | **89,095,275** | **4,065,835** | **-** | **93,163,112** | **(2,105,816)** | **8,925,908** | **-** | **99,983,205** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No.: ரீஎம்/ஜீ/எஸ்பீசீ/1/13/42
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2015 மார்ச் 04

தலைவர்,
அரசாங்க அச்சக கூட்டுத்தாபனம்

**அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகவல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1968 இன் 24 ஆம் இலக்க அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரமான விரிவானதோர் அறிக்கை கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு 2014 மே 09 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு

(ISSAI 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி

நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனதுநிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி ஒழுகாமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

**(அ) இ.க.நி. இல. 02**

இறுதி இருப்புக்களின் பெறுமதி கிரயம் அல்லது தேறக்கூடிய நிகரப் பெறுமதி ஆகிய பெறுமதிகளில் மிகக்குறைந்த பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுதல் வேண்டும். தேறிய நிகரப்பெறுமதியில் இருப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இருப்புக்களின் பெறுமதி தேறக்கூடிய நிகரப் பெறுமதி வரை குறைத்து பதிவழிக்கப்பட்ட முறை நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இ.க.நி. இல. 07**

மீளாய்வாண்டில் வருமான வரியாக ரூபா 31,421,285 கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் உண்மையான வருமான வரிச் செலுத்துகையினைக் காண்பிப்பதற்குப் பதிலாக ரூபா 92,604,587 வருமான வரி மீளளித்தல் எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) இ.க.நி. இல. 08**

முன்னைய ஆண்டுகளிற்கான பிழை திருத்தங்கள் என கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய பொறுப்புக் கணக்குகளின் மீதிகளை காலத்திற்கேற்ப சீராக்கி முன்னைய ஆண்டின் நிதி நிலைமையினை மறுசீரமைப்பதற்குப் பதிலாக மொத்தத் தொகையும் முன்னைய ஆண்டில் முன்கொண்டுவரப்பட்டிருந்த திரட்டிய இலாபத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது.

**(ஈ) இ.க.நி. இல. 16**

ரூபா 158,465,019 கிரயமான முழுமையாகத் தேய்விடப்பட்டு தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்கள் மீள விலைமதிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) இ.க.நி. இல. 23**

கடன் பெறல் கிரயத்தை மூலதனமாக்குதல் தொடர்பில் கருத்திற்கொண்டு அதன் படி நடவடிக்கை எடுப்பதற்கு நியமத்தின் ஏற்பாடுகள் ஆர்வமூட்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் மூலதனமாக்கப்படத்தக்க கடன்பெறல் கிரயங்கள் இனங்காணப்பட்டு பொருத்தமான சொத்துக்களிற்குரிய கடன்பெறல் கிரயம் மீண்டெழும் செலவினமாக வருமானத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.

**(ஊ) இ.க.நி. இல. 39**

கூட்டுத்தாபனத்தின் நிதிச் சொத்துக்கள் நியாயப் பெறுமதியில் (Fair Value) பெறுமதியிடப்படாது அவற்றின் கிரயத்தில் பெறுமதியிடப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

கடன்களை அறவிடுதல் இயலுமை தொடர்பில் முறையான பகுப்பாய்வொன்றை மேற்கொண்டு அறவிட முடியாத ஐயக்கடன்களாக பதிவழிக்கப்பட வேண்டிய தொகையினை நிச்சயிக்காது, மொத்த வியாபாரக் கடன்பட்டோரில் 2.5 சதவீதம் அல்லது ரூபா 18,765,192 மீளாய்வாண்டில் அறவிட முடியாத ஐயக்கடனாக ஒதுக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2012 ஆம் ஆண்டிற்குரிய செலுத்தவேண்டிய வருமான வரியினைக் கணிப்பிடுகையில் செலுத்தியிருந்த பொருளாதாரச் சேவைகள் கட்டண வரி பெறுமதி மாத்திரம் வரிப் பொறுப்பாக எதிரீடு செய்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ள போதிலும், 2012 ஆம் ஆண்டிற்கான இலாபத்தின் மீது செலுத்தவேண்டிய வருமான வரியைக் கணிப்பிடுகையில் ஆண்டின் போது செலுத்தப்படாத பொருளாதாரச் சேவைகள் கட்டணப் பெறுமதி செலுத்தவேண்டிய வரியிலிருந்து கழிக்கப்பட்டிருந்தமை காரணமாக செலுத்தவேண்டிய வருமான வரியாக முன்கொண்டுவரப்பட்டிருந்த மீதி ரூபா 2,232,569 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

விற்பனைகள் சேகரித்தல் கணக்கின் ரூபா 2,288,897 ஆன செலவு மீதி, விற்பனைகள் கட்டுப்பாட்டுக் கணக்குடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் வேறுபாடுகளுக்கு கணக்காய்வின் போது விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) கடன்கொடுத்தோர் முற்பணக் கணக்கிற்கும் பட்டோலைக்கும் இடையிலான ரூபா 460,550 வேறுபாடு

(ஆ) 2008 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளிற்கு பாடசாலை புத்தக கட்டளைகளிற்காக கல்வி வெளியீட்டு திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய கடன்பட்டோர் மீதிக்கும் அத்திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட கடன்பட்டோர் மீதிக்குமிடையிலான ரூபா 8,535,013 வேறுபாடு.

(இ) கம்பஹா விற்பனை நிலையத்தின் 2/டீ/3146 ஆம் இலக்க கடன்பட்டோர் மீதிக்கும் விற்பனை நிலையத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த கடன்பட்டோர் மீதிக்குமிடையிலான ரூபா 493,662 வேறுபாடு.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

வியாபார கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 231,103,473 தொகைக்குரிய மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 514,427,534 ஆக காணப்பட்டதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த மீதி ரூபா 750,607,688 ஆகியிருந்தது. வியாபாரக் கடன்பட்டோர் மீதி 46 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. தலைவரின் கருத்துத் தெரிவிப்பின் படி கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடமிருந்து பணம் கிடைப்பதில் தாமதமே இந்த கடன்பட்டோர் மீதியின் அதிகரிப்புக்கு காரணமாகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதியான ரூபா 750,607,688 தொகையில் 69,480,869 தொகை 01 ஆண்டு காலமாகவும், ரூபா 48,529,734 தொகை 2 – 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலமாகவும் அறவிடப்படாதிருந்ததுடன் 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 27,607,294 ஆகும். முன்னைய கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பீடு செய்கையில் மீளாய்வாண்டில் கடன்களை அறவிடுதல் மிகவும் பலவீனமான

மட்டத்தில் காணப்பட்டது. விற்பனை நிலையங்களில் கடன்களை அறவிடுதல் 93 – 28 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டதுடன் கண்டி மற்றும் கம்பஹா விற்பனை நிலையங்களில் கடன்களை அறவிடுதல் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(இ) கடன்பட்டோர் மிதிகளுக்கு உறுதிப்படுத்தல்களை வழங்கியிருந்த கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 928,947 பெறுமதியான கடன்பட்டோர் எவ்வித மீதியினையும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்துவதற்கில்லையென குறிப்பிட்டிருந்த போதிலும், அது தொடர்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசிய கல்வி நிறுவகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய 04 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்த ரூபா 6,448,439 கடன் மீதியில் 2014 நவம்பர் இறுதி வரை எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்திடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 7,989,969 கடன் மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அதில் ரூபா 6,689,495 பெறுமதி 02 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்தது.

(ஊ) அநுராதபுரம் விற்பனை நிலையத்தில் 2012 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 5,491,257 கடன்பட்டோர் மீதி 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இக் கடன், கடன் வழங்கும் நடைமுறையிலிருந்து விலகி முன்னாள் தலைவரின் வாய்மொழிமூல அறிவுறுத்தலின் கீழ் வழங்கப்பட்டிருந்ததுடன் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டமை சம்பந்தமாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், இக்கடனை அறவிடுதல் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கூட்டுத்தாபனத்தின் அப்பியாசக் கொப்பிகளை விற்பனை செய்வதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் விற்பனை முகவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் இம் முகவரால் கொடுப்பனவு செய்யப்படாதிருந்த தொகை ரூபா 5,800,306 ஆகும். இக் கடன் வழங்குதல் தொடர்பில் முகவரிடமிருந்து பிணை பெறப்படாதிருந்ததுடன் தலைவரின் பணிப்பின் பேரில் கடன் வழங்கப்பட்டிருந்தது. பிணைகளின்றி கடன் அடிப்படையில் அப்பியாசக் கொப்பிகளை விற்பனை செய்கையில் காசுக்கு பொருட்களை விற்பனை செய்கையில் வழங்கப்படுகின்ற 40 சதவீத கழிவும் வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு மொத்தக் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 54,174,102 ஆகக் காணப்பட்டதுடன் கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வின் படி 02

இற்கும் 05 இற்கும் இடைப்பட்ட ஆண்டுகாலமாக தீர்க்கப்படாதிருந்த கடன்கொடுத்தோரின் பெறுமதி ரூபா 23,102,304 ஆகக் காணப்பட்டது. இது மொத்த கடன்கொடுத்தோர் பெறுமதியில் 42 சதவீதமாக காணப்பட்டது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டத்தின் 26(1) ஆம் உப பிரிவு | 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை கொடுக்கல் வாங்கல் செய்வோரிடமிருந்து சேகரித்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ரூபா 116,696,970 பெறுமதியான பெறுமதிசேர் வரியில் ரூபா 92,960,966 அல்லது 70 சதவீதமானவை 2013 திசெம்பர் 31 வரை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்புதல் வரி அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு | 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை கொடுக்கல் வாங்கல் செய்வோரிடமிருந்து சேகரித்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ரூபா 73,845,234 தேசத்தை கட்டியெழுப்புதல் வரி பெறுமதியில் ரூபா 67,718,361 அல்லது 90 சதவீதமானவை மீளாய்வாண்டின் இறுதி வரை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவையின் 371(2)(ஈ) பிரமாணம் | தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,050,000 தொகையான முற்பணம் கணக்காய்வுத் திகதியான 2014 திசெம்பர் 31 வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2003 ஒக்தோபர் 28 ஆந் திகதிய 17 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கூட்டுத்தாபனத்தின் தலைவர் வெளிநாடுகளிற்கு செல்கையில் பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் முன் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் அந்த வெளிநாட்டு பயணங்களிற்காக கூட்டுத்தாபனத்தின் நிதியிலிருந்து ரூபா 1,422,353 செலவிடப்பட்டிருந்தது. |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 8.3 ஆம் பிரிவு | கூட்டுத்தாபனத்தின் தலைவரது உள்நாட்டு தங்குமிடக் கட்டணங்களாக ரூபா 784,500 தொகை மீளாய்வாண்டில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |
| | (ii) 8.3.9 ஆம் பிரிவு | அமைச்சுக்குரிய கையடக்கத் தொலைபேசி பட்டியல்களை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனம் ரூபா 61,187 செலுத்தியிருந்தது. |
| (ஊ) | 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ 57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | நிதி அமைச்சரின் அங்கீகாரமின்றி ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்டு நன்கொடைகள் செலுத்தப்பட முடியாத போதிலும், மீளாய்வாண்டில் ரூபா 3,025,000 நன்கொடை வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,705,147 கிரயம் கொண்ட அப்பியாசக் கொப்பிகள் விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளிற்காக நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன. |

## 2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

15 கைவிரல் அடையாளமிடும் இயந்திரங்களை கொள்வனவு செய்கையில் அடிப்படையொன்றின்றி குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த நிறுவனத்தை புறக்கணித்து நான்காவது குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 538,100 நட்டம் ஏற்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட

பாகங்களின் தொழில்நுட்ப நிலைமை தொடர்பில் சாத்தியவள ஆய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி மீளாய்வு

**(அ) நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 78,095,872 வரிக்கு முன்னரான தேறிய இலாபமொன்றானதுடன் நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 140,567,143 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 62,471,271 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் இலாபம் ரூபா 20 மில்லியனால் குறைவடைந்தும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 58 மில்லியனால் அதிகரித்தும் இருந்தமை இவ் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும்.

### 3.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

| திரவத்தன்மை விகிதங்கள் | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1.41:1 | 1.44:1 | 1.28:1 | 1.19:1 |
| விரைவுச் சொத்துக்கள் விகிதம் | 1.04:1 | 0.9:1 | 0.84:1 | 0.91:1 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொடர்ச்சியாக பற்றாக்குறை மூலதன நிலைமை காட்டப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டில் பெறப்பட்ட குறுங்கால கடன்களின் பெறுமதி ரூபா 494,089,476 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 437,919,681 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. உரிய திகதியில் கடன்களை செலுத்தாமை காரணமாக செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்த மேலதிக வட்டி அடங்கலாக ரூபா 46,531,402 தொகை மீளாய்வாண்டில் குறுங்கால கடன் வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. அது வரிக்கு முன்னரான இலாபத்தில் 59 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) குறுங்கால வங்கிக் கடன்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் வங்கி மேலதிகப்பற்று வசதிகளை பெற்றுக்கொள்ளல் அதிகரித்திருந்தமை காரணமாக மீளாய்வாண்டிற்கான நிதிக் கிரயம் ரூபா 62,548,765 வரை அதிகரித்திருந்தது.

9

(இ) முகாமைத்துவத்தினால் தொழிற்படு மூலதன வளர்ச்சி உபாயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. கடன்களை சேகரித்தலில் வினைத்திறனின்மை, இருப்புக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை பின்பற்றியிருக்காமை போன்றன காரணமாக மீளாய்வாண்டின் மொத்த நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதியில் 88 சதவீதமானவை கடன்பட்டோர் மற்றும் "திரவத்தன்மை குறைவான" இருப்பு என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

(ஈ) விரைவுச் சொத்துக்களில் உள்ளடங்கியிருந்த நடைமுறைச் சொத்துக்களில் 83.2 சதவீதம் அல்லது ரூபா 750,607,688 கடன்பட்டோர் பெறுமதியை பிரிதிநிதித்துவம் செய்திருந்ததுடன் அத்தொகையில் ரூபா 70,739,757 பெறுமதி 2013 ஆம் ஆண்டில் 100 சதவீதம் அறவிடப்படாதிருந்த கடன்பட்டோர் மிதிகளை உள்ளடக்கியிருந்தது. அதன்படி, நடைமுறைச் சொத்துக்களில் உண்மையாக வெளிக்காட்டப்படும் பெறுமதியிலிருந்து நடைமுறைப் பொறுப்புக்களை தீர்க்கும் சாத்தியம் அல்லது திரவத்தன்மை தொடர்பில் கணக்காய்வில் சிக்கலான நிலை காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### 4.1.1 வருமானம்

| வருமானத் தலைப்பு | 2013 | 2012 | முரண் | | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | | சாதகம் | பாதகம் | |
| | (ரூபா 000) | (ரூபா 000) | (ரூபா 000) | (ரூபா 000) | |
| பாடசாலை புத்தக வருமானம் (தண்டப்பணம் அறவிடப்பட்ட பின்னர்) | 750,660 | 711,473 | 45,187 | - | 6 |
| வர்த்தக அச்சிடல் வருமானம் | 244,649 | 259,124 | - | (14,475) | (5.6) |
| அப்பியாசக் கொப்பிகள் வருமானம் | 211,758 | 214,021 | - | (2,263) | (1.1) |
| ஏனைய வருமானம் | 32,056 | 40,544 | - | (8,488) | (20.9) |

பயனுள்ள ஆயட்காலத்தில் அரைவாசியேனும் முடிவடைய முன்னர் இயந்திரம் செயலிழந்த நிலைக்கு உட்பட்டிருந்ததுடன் இயந்திரத்தை கொள்வனவு செய்த நிறுவனத்தின் மூலம் திருத்துவதற்கோ அல்லது இப்பணியை நிறைவேற்றிக்கொள்வதற்காக புதிய இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்கோ முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த விற்பனை நடவடிக்கைகளிற்காக சந்தைப்படுத்தல் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் எழுதுகருவி வகைகளின் விற்பனை இலக்குகளை காட்டுகின்ற திட்டமொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அப்பியாசக் கொப்பிகளின் திட்டமிடப்பட்ட உற்பத்தி இலக்குகள் அடையப்படாதிருந்ததுடன் திட்டமிடப்பட்ட உற்பத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கையில் அப்பியாசக் கொப்பிகளின் உற்பத்திக்கு அவசியமான அடிப்படை மூலப்பொருளான வெள்ளைத் தாளினை (860 mm / 60Gsm) வருடாந்த உற்பத்திக்கு கொள்வனவு செய்வதற்காக திட்டமிடப்பட்ட அளவான 962 மெ.தொன்களில் 286 மெ.தொன்கள் அல்லது 29 சதவீதத்தை உரியவாறு வழங்குவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

## 4.4 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ரூபா 31,727,140 செலவில் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திர உதிரிப்பாகங்களில் 2013 திசெம்பர் 31 வரை ரூபா 23,859,240 பெறுமதியான இயந்திர உதிரிப்பாகங்கள் திருத்தங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. உச்ச இயலளவால் இயந்திரங்களின் உற்பத்தியினை அதிகரித்தல் இக் கொள்வனவுகளின் நோக்கமாக காணப்பட்ட போதிலும், கொள்வனவு முடிவுற்று ஓராண்டிற்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்திருந்த பின்னரும் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 6 முதல் 15 ஆண்டுகள் வரையான கால எல்லையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,118,090 பெறுமதியான உதிரிப்பாக இருப்பின் அவசியத்தன்மை குறித்து உரிய மதிப்பீடொன்றை மேற்கொள்ளாது கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,288,748 ஆன உதிரிப்பாக இருப்பு 2014 திசெம்பர் இறுதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் இயந்திர பயன்பாட்டு அறிக்கையின் படி கூட்டுத்தாபனத்தின் இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்ட காலம் பாதிடப்பட்ட மணித்தியாலங்களுடன் ஒப்பிடுகையில் 35 சதவீதம் முதல் 78 சதவீதம் வரை அதிகூடிய வீச்செல்லையினைக் கொண்டிருந்தது. விளைவற்ற 113.6 இயந்திர மணித்தியாலத்தில் 84.3 மணித்தியாலம் அல்லது 74 சதவீதமானவை வேலைகள் இன்மையாலும் 10.2 மணித்தியாலம் அல்லது 9 சதவீதம் இயந்திரம் செயலிழந்தமையாலும், 13.6 மணித்தியாலம் அல்லது 12 சதவீதம் ஊழியர்கள் இன்மையாலும் ஏற்பட்டிருந்தன.

(ஈ) போதியளவு வேலைகள் இன்மை காரணமாக கடைசல்பொறி, எழுத்துக்கோர்வை மற்றும் கட்டுதல் பிரிவுகளிலுள்ள 06 இயந்திரங்கள் மீளாய்வாண்டு முழுவதும் விளைவற்றுக் காணப்பட்டது.

(உ) கடைசல்பொறி, செயன்முறை கணனி, கடித அச்சக பிரிவுகளில் காணப்படுகின்ற 05 இயந்திரங்கள் கடந்த சில வருடங்களாக செயலிழந்து காணப்படுகின்ற போதிலும், அவற்றை திருத்துவதற்கு அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை காரணமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(ஊ) Gsm 58 கடதாசியிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு அளவுகளைக் கொண்ட ரூபா 1,190,056 பெறுமதியான அப்பியாசக் கொப்பிகளின் இருப்பு வர்ணம் இழந்திருந்தமை, இணைப்புக் கம்பிகள் துருப்பிடித்திருந்தமை காரணமாக பயன்படுத்த முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தமையால் களஞ்சியத்தில் விளைவற்று வைத்திருக்கப்பட்டுள்ளமை பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுகளின் அறிக்கைளின் மூலமும் இது தொடர்பில் கவனயீர்ப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2010 ஆம் ஆண்டில் சர்வதேச புத்தக கண்காட்சியில் இடம்பெற்றிருந்த ரூபா 224,278 காசுக் குறைவு மற்றும் ரூபா 222,205 பொருள் குறைவு என்பவற்றை தொடர்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது தொடர்ச்சியாக ஏனைய அறவிடப்பட வேண்டிய தொகையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 4.6 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

(அ) அரசாங்க அச்சக கூட்டுத்தாபனம் 6 வகைகளிற்குரிய 2,381.255 மெற்றிக் தொன் வெள்ளை அச்சடித்தல் கடதாசி வெப் ரீல் இனை மீளாய்வாண்டில் 11 சந்தர்ப்பங்களில் ரூபா 311.5 மில்லியன் செலவில் கொள்வனவு செய்திருந்தது. அவற்றில் 07 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 1,784.507 மெற்றிக் தொன்கள் அல்லது 75 சதவீதமானவை உள்நாட்டு பிரதிநிதியொருவர் ஊடாக வெளிநாட்டுக் கம்பனியொன்றிடமிருந்து ரூபா 234.6 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

- உள்நாட்டு பிரதிநிதியாக செயற்பட்டிருந்த கம்பனியின் உரிமையாளர் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் முன்னாள் தனிப்பட்ட உதவியாளர் என்பது வெளிப்பட்டிருந்ததுடன் இக் கம்பனியின் பெயரில் செயற்படுவதற்கு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 184 ஆவது பிரிவின் பிரகாரம் அதிகாரம் வழங்கப்பட்டிருக்காத வெளிவாரி ஆளொருவர் மூலம் கேள்விமனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் இவ்வாறு போலியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்விமனு சட்டரீதியற்றதாக காணப்பட்டமையால் கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 7.8 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்விச் சபையால் கூறுவிலையினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது, இந்த வழங்குனரிடமிருந்து ரூபா 234.6 மில்லியன் பெறுமதியான கடதாசி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நாணயக் கடிதம் திறக்கப்பட்டு ஒரு மாதத்தினுள் கடதாசி களஞ்சியத்திற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும், வழங்கனருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 200.5 மில்லியன் தொகையான 6 கேள்விகளுக்குரிய பொருட்கள் 12 முதல் 45 நாட்கள் நாட்கள் தாமதித்து வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், தாமதக் காலத்திற்காக தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. கடதாசிகளை வழங்குதல் தாமதிக்கப்பட்டிருந்தமையால் 2014 ஆம் ஆண்டிற்கான 09 வகையான பாடசாலை புத்தகங்களை உரிய வேளையில் அச்சிட்டு வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாது போயிருந்தமை காரணமாக ரூபா 8,660,931 தண்டப்பணத்தை செலுத்தவேண்டியேற்பட்டிருந்தது. அவ்வாறே கடதாசிகள் தாமதித்து கிடைத்திருந்தமையால் திட்டமிடப்பட்ட அச்சிடல் நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தமையால் ரூபா 25,062,432 ஆன 205 மெற்றிக் தொன் கடதாசி ஏறத்தாழ 8 மாதங்கள் விளைவற்று இருப்பாக காணப்பட்டது.

(இ) அப்பியாசக் கொப்பிகளின் உற்பத்தி நடவடிக்கைகளிற்காக ரூபா 32,717,360 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கடதாசி இருப்புக்குரிய ரூபா 2,660,490 செயலாற்றல் பிணைமுறி உரிய காலத்திற்கு முன்னரே விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 7.4.1 ஆம் பிரிவின் படி தேவையான முறைப்படியான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவு காலத்தை வழங்கக் கூடிய வகையில் கேள்வி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 125 மெற்றிக் தொன் வெள்ளைக் கடதாசியினை கொள்வனவு செய்வதற்குரிய கேள்வி மதிப்பீடு தாமதிக்கப்பட்டிருந்தமை காரணமாக நான்காவது குறைந்த விலைமனுவை சமர்ப்பித்திருந்த மேற்படி நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தமையால் ரூபா 1,299,726 மேலதிகமாக செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

## 4.7 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

கூட்டுத்தாபனத்தின் 10 ஊழியர்கள் ஊடக, தகவல் அமைச்சுக்கும் திறன் அபிவிருத்தி அமைச்சுக்கும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களது ரூபா 3,018,894 தொகையான சம்பளங்கள், மேலதிகநேர படியினை மீள்நிரப்பல் செய்யாது மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.8 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1968 இன் 24 ஆம் இலக்க அரசாங்க அச்சக கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்திற்கு முரணாக உப தலைவர் பதவியொன்றை தோற்றுவித்து அதற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தருக்கு படி, தொலைபேசி பட்டியல்கள், வெளிநாட்டு பயணங்களிற்காக ரூபா 768,191 செலுத்தப்பட்டிருந்ததுடன் வாடகை அடிப்படையில் வாகனமொன்று வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே முறைப்படியான அங்கீகாரமின்றி (HM 1-1) செயற்பாட்டு முகாமையாளர் என்ற பெயரில் புதிய பதிவியொன்று உருவாக்கப்பட்டு அதற்காக உத்தியோகத்தர் ஒருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் 686 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளிலுள்ள 118 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சேர்த்தக்கொள்ளப்பட்டிருந்த 32 மேலதிக ஊழியர்களுக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அமைய அடிப்படையில் 03 ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையில் 57 ஊழியர்களும்

(இ) 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 1:1:6(V) ஆம் பந்தியின் படி உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிக்கு உரித்தற்ற கூட்டுத்தாபனத்தின் தாபன முகாமையாளர் பதவியிலுள்ள பதிற்கடமை உத்தியோகத்தருக்கு வாகனமொன்று வழங்கப்பட்டு 2011 சனவரி முதல் 2013 ஒக்தோபர் வரை ரூபா 1,320,000 வாகன வாடகைத் தொகையும் ரூபா 1,141,655 எரிபொருள் படியும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2010 யூலை 15 ஆந் திகதிய 5034 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த பதிற்கடமை விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தருக்கு 2010 ஆம் ஆண்டிலிருந்து 2013 திசெம்பர் வரை எரிபொருள் படியாக ரூபா 558,023 செலுத்தப்பட்டிருந்ததுடன் பட்டியல்களிற்காக பணத்தைப் பெறுகையில் ஓட்டப்பதிவேடு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்பு முகாமையாளருக்கு வழங்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை பாவனையிலிருந்து அகற்றுமாறு 2013 பெப்ரவரி மாதத்தில் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும், அதனை கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்காது உத்தியோகபூர்வ வதிவிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு பயணித்தமைக்காக ஓட்டப்பதிவேடின்றி ரூபா 36,254 எரிபொருள் செலவினம் மீளளிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அனைத்து வாகனங்களிற்காகவும் வாகன சம்பவக்குறிப்பு புத்தகங்கள் பேணிவரப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தின் வாகனங்களுக்கு உரிய சம்பவக் குறிப்பு புத்தகங்கள் முறைப்படி பேணிவரப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

கூட்டுத்தாபனம் 2009 – 2013 காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்றை தயாரித்திருந்த போதிலும், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் அத்திட்டம் வருடந்தோறும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும், உண்மையான மீதிகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5.3 கணக்காய்வுக் குழு

2013 ஆகஸ்ட் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்ற அப்பியாசக் கொப்பிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையினை விரைவாக அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமெனவும் அதற்காக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென்றும் பிரேரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) பெறவேண்டிய கணக்குகள்

(ஈ) கடன்பட்டோர் கட்டுப்பாடு

(உ) கொள்வனவுகள்

(ஊ) தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

(எ) வாகனக் கட்டுப்பாடு

(ஏ) ஆளணி முகாமைத்துவம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதிற்கடமை)

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

## 2.2 நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)

(அ) இ.க.நி. இல. 02

எதிர்வரும் ஆண்டுகளில் இருப்புக்களின் பெறுமதி, தேறிய திரண்ட பெறுமதி வரையில் பதிவு செய்து குறைக்கப்பட்ட முறை நிதி கூற்றுக்களில் வெளிக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இ.க.நி.இல. 07

2014 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது நிதிப்பாய்ச்சல் கூற்று முறையாக சமர்ப்பிக்கப்படும்.

(இ) இ.க.நி.இல. 16

முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டுள்ள, தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் சொத்துக்களின் வகைப்படுத்தலின் கட்டமைப்பு பற்றி குறிப்பொன்றை நிதிக் கூற்றுக்களில் இல 3.1 ஊடாக காட்டப்பட்டுள்ளன.

(ஈ) இ.க.நி.இல. 23

2013 ஆம் ஆண்டில் இவ்வாறான செலவினங்களை கண்டறிய முடியாவிடின், குறித்த ஆண்டில் இடம்பெற்ற சகல கடன் பெறுவனவுகளும் மூலப்பொருள் இறக்குமதிக்காக ஒதுக்கப்பட்டதால் அவை மூலதனமயமாக்கலுக்கு சாத்தியப்படாது என்பதால் ஆகும்.

(உ) இ.க.நி.இல. 39

எதிர்காலத்தில் நிதிச் சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் நிதி நிலைமை கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்

கடன்பட்டோர் உட்பட நிதிச் சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் (Fair Value) நிதி நிலைமை கூற்றில் வெளிப்படுத்தும் போது, இவ்வாறு மொத்த வர்த்தக கடன்பட்டோரில் சதவீதமொன்றை அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடனுக்காக ஒதுக்குவதற்கு பதிலாக, ஒவ்வொரு கடன்பட்டோரிடமிருந்து கிடைக்க வேண்டிய நிலுவையை அறவிடுவதற்கான இயலுமையை கருத்திற்கொண்டு இந்த ஒதுக்கங்களை மேற்கொள்ள வேண்டும்.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) 2012 ஆம் ஆண்டுக்கென சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுக்கலினால் எடுத்துக் காட்டப்பட்ட இலாபம் தவறானதென கணக்காய்வினால் அறிவிக்கப்பட்டமையால், அதனால் பின்னர் நிவர்த்தி செய்து திருத்திய வருமான வரி கணிப்பீடு (சுநஎளைநன வயஒ ஊழஅிரவயவழைஉ) உண்ணாட்டரசிறை திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த பொருளாதார சேவைகள் கட்டண பெறுமதியும் தற்சமயம் சீராக்கப்பட்டுள்ளது.

### 2.2.4 இணங்காத கட்டுப்பாட்டு கணக்குகள்

இக்கணக்கின் செலவு மீதி விற்பனை கட்டுப்பாட்டு கணக்குடன் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 2.2.5 தெளிவுபடுத்தப்படாத மாற்றங்கள்

(அ) சரியான அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இதனை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க முடியும்.

(ஆ) மேற்படி மொத்த நிலுவையும் பாடசாலை புத்தகங்களை விநியோகித்தமையால் உருவாகவில்லையென்பதுடன், பற்றுச் சீட்டு புத்தகம் அச்சிடல் போன்ற ஏனைய அச்சக பணிக்காக கிடைக்க வேண்டிய பணமும் இதில் உள்ளடக்கப்படும். இம்மீதி உறுதிப்படுத்தப்படாத போதிலும், பழைய கடன்களை அறவிடும் வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த ஆவணங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து மேற்படி நிலுவையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) ஏ. கணகரத்தனம் என்ற கடன்படுநரின் லெஜர் அட்டையில் தவறாக கூட்டப்பட்டமையால் 2013.12.31 ஆம் திகதியில் நிலுவை ரூ. 1,645,936/- என கட்டப்பட்டதுடன், உறுதிப்படுத்துவதற்கு அனுப்பப்பட்ட நிலுவை இதுவாகும். எனினும் ரூ. 493, 662/- என்றவாறான இந்த கூட்டல் தவறை சீராக்கினால் குறித்த அட்டையில் சரியான நிலுவை, கடன்படுநரினால் உறுதி செய்யப்பட்ட நிலுவையான ரூ. 1,152,224/- பெறுமதிக்கு சமமாகும். இது பற்றி கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்பட்டது.

### 2.2.6 கணக்காய்வில் சாட்சியங்கள் இல்லாமை

நிலுவை உறுதிப்படுத்தல் நேரடியாக அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகருக்கு கிடைக்கக்கூடியவாறு, 141 கடன்பட்டோருக்கு நிலுவையை உறுதிப்படுத்தும் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும், உறுதிப்படுத்தல் கிடைக்கப் பெறுதல் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாலான விடயமாகும். (மேற்படி நிலுவை உறுதிப்படுத்தல் அழைப்பு கடிதங்களின் பிரதிகள் அடங்கிய ஆவண கோவை கணக்காய்விற்கு கையளிக்கப்பட்டுள்ளது)

### 2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) இவ்வாறு வியாபார கடன்பட்டோர் நிலுவை அதிகரிப்பதற்கு அதில் உள்ளடக்கப்பட்ட கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் நிலுவையில் அசாதாரண அதிகரிப்பு காரணமாக அமைந்தது. 2013 ஆண்டில் பொது நலவாய நாடுகள் அமைப்பின் மாநாடு நடைபெற்ற சமயம் திறைசேரியினால் கல்வி வெளியீட்டு திணைக்களத்திற்கு நிதி விடுவிப்பு தாமதப்படுத்தப்பட்டமையால் இந்நிலைமை ஏற்பட காரணமாயுள்ளது. 2012.12.31 ஆம் திகதியில் ரூ. 297,111,782/- ஆன கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் கடன்பட்டோர் நிலுவை இத்தாமதத்தால் 2012.12.31 ஆம் திகதியில் ரூ. 560,291,280/- ஆக காணப்பட்டது. எனவே இந்நிலுவை தவிர வேறு வியாபார கடன்பட்டோரின் ஒப்பீட்டு அதிகரிப்பு 18% ஆகும். எனினும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டில் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நிலுவை தொகை உட்பட குறித்த பற்றுச் சீட்டு சீராக்கப்பட்டுள்ளது.

(ஆ) கடன்பட்டோரிடமிருந்து கடன் தொகையை அறவிடுவதற்கு பிரத்தியேக கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், 2014 ஆம் ஆண்டு தொடக்கம் தேவையான வேளைகளில் கடன்பட்டோரை தனிப்பட்ட முறையில் சந்தித்து பற்றுச் சீட்டு மற்றும் குறித்த ஆவணங்களை சமர்ப்பித்து 1 வருடத்தை விட பழைமையான கடன்பட்டோரிடமிருந்து கடன் பணத்தை அறவிடும் முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) மேற்படி வேலைத்திட்டத்தின் ஊடாக இந்த 100% வீதம் அறவிடப்படாத கடன்பட்டோருக்கும் இறுதி நினைவூட்டல் அனுப்பப்பட்டு மேலும் உரிய கடன்பட்டோரிடமிருந்து ஒரு பகுதியையேனும் அறவிட முடியுமா என ஆராய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) இவ்விடயம் பற்றி தேசிய கல்வி நிறுவகம் பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதுடன், இதன் பலனாக மேற்கண்டவாறு செலுத்துவதற்கு அந்நிறுவனத்தின் நிர்வாக சபை அங்கீகாரம் அளித்துள்ளது. எனினும் குறித்த புத்தக இருப்பில் சிலவற்றிற்கு பொருட்கள் கிடைத்தமைக்கான குறிப்பு (GRN) படிவங்களை விநியோகிக்காமையால் அவற்றை கையளித்தமைக்கான கையளிக்கும் அறிவித்தல் (Dispatch Advises) எம்மிடம் இல்லாமையினால் செலுத்துதல் தாமடைந்துள்ளது. இந்த சிக்கலை நிவர்த்தி செய்து பணத்தை பெற்றுக்கொள்வதற்கு இந்த ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) இக்கூட்டுத்தாபனத்தினால் விநியோகிக்கப்படும் கழிவு கடதாசிகளுக்கு பணம் செலுத்தப்படுவதில்லை அதற்குப் பதிலாக கோப்புறைகள் (Case Cover) உட்பட ஏனைய எழுது பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படும். இதற்காக கடந்த 2 ஆண்டுகளின் உள்நாட்டு மூலப்பொருள் விநியோகத்தை சோதித்துப் பார்த்தால் இது புலப்படும். தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தினால் தம் உற்பத்தி விநியோகத்தை ஆரம்பித்த போது இந்த நிலுவை தேசிய விநியோக கணக்கினூடாக சீராக்கப்படும்.

(ஊ)
- அனுராதபுரம் விற்பனை நிலையத்தின் தொழிற்பாட்டு உத்தியோகத்தரினால் பிணை பெற்றுக்கொள்ளாது மஹேஸ் வல்கம என்பவருக்கு கடன் கொடுக்கப்பட்டுள்ளது. மஹேஸ் வல்கம என்பவர் தொடர்ந்து கொடுக்கல் வாங்கல் செய்துள்ளமையால் மீதிப் பணம் நிலுவையின்றி செலுத்தப்பட்டதுடன், இவரது மனைவி நியமனமொன்றை பெற்று அனுராதபுரம் விற்பனை நிலையத்தில் சேவையாற்றுதல் போன்ற நம்பகத்தன்மையான விடயங்களின் அடிப்படையில் தலைமை அலுவலகத்தின் விற்பனை பிரிவிற்கு அறிவுறுத்தல் வழங்காது கடன் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டது.

- விற்பனை நிலையத்தின் செயற்பாட்டு உத்தியோகத்தரினால் அனுராதபுரம் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் ஊடாகவும் பொது முகாமையாளரினால் நேரடியாகவும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் ஊடாக விடுக்கப்படும் அழைப்புக்களுக்கு ஏற்ப அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- 2012.12.31 ஆம் திகதியில் ரூ. 7,256,521.00 தொகை அறவிடவிருந்தது. 2013.12.07 ஆம் திகதியளவில் ரூ. 5,491,302.00 வரை குறைந்திருந்தது.

(எ) திரு.ஜ.ஜீ.ஏ. பண்டார அப்பியாசக் கொப்பிகள் விற்பனை செய்யும் முற்காலப்பகுதியில் விற்பனைக்கு ஏற்ப கூட்டுத்தாபனத்திற்கு பணம் செலுத்தியிருந்தார். சாதாரணமாக அப்பியாசக் கொப்பிகள் கூடுதலாக விற்பனையாகும் ஆண்டுகளில் முதற் பகுதியில் பெருமளவு பணத்தை பிணையாக வைப்பது கடினமான காரியம் என்பதால் ஒப்பந்தமொன்றை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ஏ) 3 ஆண்டுகளுக்கு பழைமையான கடன்பட்டோரிடமிருந்து குறித்த பணம் தொடர்பில் தொடர்ந்தும் உரிமை கோரப்படாவிட்டால் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் அந்நிலுவைகளை வருமானத்தில் வரவு வைப்பதற்கு குறித்த கணக்குகளில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

## 2.4 சட்டங்கள், ஒழுங்குவிதிகள், நிபந்தனைகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பொருந்தாமை

(அ) 2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டத்தின் 153,155 மற்றும் 160 ஆம் பிரிவுகளின் கீழ் உண்ணாட்டரசிறை திணைக்களத்தினால் விதிக்கப்பட்டிருந்த நிறுத்திய வரி (Withholding Tax) அமுலாக்கப்பட்ட காலத்தில், வாடிக்கையாளர்களினால் நேரடியாக இவ்வரி கூட்டுத்தாபனத்தின் சார்பில் செலுத்தப்பட்டமையால், 25 மில்லியன் ரூபாவிற்கு அதிகமான தொகை 2010 ஆம் ஆண்டளவில் உண்ணாட்டரசிறை திணைக்களத்திற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டது. இது பற்றி சமரசம் செய்யப்படும் வரையில் ஏனைய வரி பணத்தை நிறுத்தாத செலுத்துவதனால் கூட்டுத்தாபனத்தின் திரவத்தன்மையில் பாதிப்பினை ஏற்படுத்துமென்பதால் குறித்த பணத்தை நிறுத்தி வைப்பதற்கு அப்போதைய முகாமைத்துவம் தீர்மானித்தது.

(ஆ) மேற்படி 2.4 (அ) வில் தெளிவுபடுத்தப்பட்டவாறு, தேசத்தை கட்டியெழுப்புதல் வரியும் கூட்டுத்தாபனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டதுடன், சேர் பெறுமதி வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்புதல் வரி என்பவற்றிற்குரிய வரி அறிக்கைகள் மாத்திரம் உண்ணாட்டரசிறை திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

(இ) தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட முற்பண தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) 2010.10.11 ஆம் திகதி நிதி, திட்டமிடல் அமைச்சினால் வெளிநாட்டு பிரயாணங்களுக்குரிய கொடுப்பனவுகள் மற்றும் அதனோடு தொடர்புபட்ட செலவுகள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் நி.தி.அ 01/2010/01 கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இச்செலவுகள் செலுத்தப்பட்டன. மேற்படி சுற்றறிக்கையின் அறிமுகப் பகுதியில் இதற்குரிய ஏனைய சுற்றறிக்கைகள் திருத்தப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே கௌரவ பிரதம அமைச்சரின் அங்கீகாரத்தின் படி தலைவர் இந்த வெளிநாட்டு சுற்றுப்பிரயாணங்களை மேற்கொண்டார்.

மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு கணப்பீடு செய்யும் அடிப்படை, விமான பயண விபரங்கள் என்பன சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான வெளிநாட்டு பணம் நேரடியாக வங்கியிலிருந்து பெறப்பட்டுள்ளது. மேற்படி விபரங்கள் இலங்கை மத்திய வங்கியின் படிவம் 1 இற்கு ஏற்ப உரிய வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்டடுள்ளன. உரிய விபரங்கள் இன்றி எந்தவொரு வங்கியும் வெளிநாட்டு பணத்தை விநியோகிக்காது. இத்தகவல் மற்றும் ஆவணங்களை கண்காய்வுக்கு சமர்ப்பிக்க முடியும்.

(உ) (i) மேற்படி விளக்கத்திற்கு ஏற்ப தங்குமிட வசதிகளுக்காக செலுத்தப்பட்ட கட்டணங்களின் கூட்டுத்தொகையான ரூ.748,500/- பணம் செலுத்தப்பட்டிருப்பது அரச அனுசரனையுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இணைக்கப்பட்டுள்ள சவரிங் கோப்பரேஷன் ஹோட்டலில் அறையொன்றுக்காக கழிவு விலைக்காகும்.

(ii) கூட்டுத்தாபனம் உரித்தாகும் இணை அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தொலைபேசி பட்டியல் செலுத்தப்பட்டுள்ளது.

(ஊ) அரச நிறுவனங்களின் தலைமைகளால் அரச வைபவங்களை நடத்தும் போது அவர்களுக்குரிய ஒதுக்கீடுகள் போதாமை என்பதால், எமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் படி அன்பளிப்புகள் செலுத்தப்படும். அரச நிறுவனங்களுக்குரிய சுற்றறிக்கைகளுக்கு அமைவாக கடமைகளை மேற்கொண்டாலும் அரச வைபவங்கள் மற்றும் வேறு சமய நிகழ்வுகள் போன்ற வைபவங்களின் போது அது பற்றி அனுசரனை கோரப்பட்ட போது எமது உற்பத்தி தொடர்பில் பதிலை பெற்றுக்கொள்ளல், சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தல் போன்ற விடயங்களை கருத்திற்கொண்டு, உரிய அனுசரணை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன எத்துகலவினால் தயாரிக்கப்பட்ட “மஹாசமயம” அபிநய நாடகம் வெகுசன ஊடகம், தகவல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட “வெசகே மஹா கீத கோவிந்தய” மற்றும் புத்தசாசன அமைச்சினால் அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட “அரச வெசக் வைபவத்திற்காக” எமது நிறுவனத்தினால் ஒரு மில்லியன் ரூபா படி அன்பளிப்புச் செய்யப்பட்டதுடன், 2013.05.16 ஆம் திகதி நடத்தப்பட்ட 737 ஆம் பணிப்பாளர் சபை கூட்டத்தில் இதற்கென அங்கீகாரம் கிடைத்துள்ளது.

கண்டி வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீ தளதா மாளிகையின் தளதா பெரஹெரா வீதி ஊர்வலம் செல்லும் சந்தர்ப்பத்தில் SPC அப்பியாசக் கொப்பி விளம்பர பலகையை காட்சிப்படுத்துவதற்காக ஸ்ரீ விஷ்ணு மகா தேவாலயத்தின் தலைவரின் நிதி அதிகாரித்திற்கு அமைய ரூ. 25,000/- அனுசரனை வழங்கப்பட்டது.

2011.02.11 ஆம் திகதி அரச முயற்சி சுற்றறிக்கை இலக்கம் 57 இற்கு அமைய ஒரு இலட்சம் ரூபா அனுசரனைக்கு கௌரவ நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தமையால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.100,000/- இற்கு அதிகமான கொடுப்பனவுகளுக்கு காப்பு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென பணிவுடன் அறியத்தருகின்றேன்.

இங்கு சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அளிக்கப்பட்ட சகல அன்பளிப்புகளும் அரச நிறுவனங்களில் பொதுப் பணிக்காக அல்லது சமூக சேமநல பணிக்காக மேற்கொள்ளப்பட்ட அன்பளிப்புகளே தவிர தனியார் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட அன்பளிப்புகள் அல்ல. மேலும் ரூ.100,000/- விட குறைந்த அன்பளிப்புகள் PED 57 சுற்றறிக்கைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் சந்தைப்படுத்தல் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சகல அன்பளிப்புகளும் சுற்றறிக்கைக்கு ஏற்ப மேற்கொள்ளபட்டுள்ளது.

## 2.4 பொருளாதாரமல்லாத கொடுக்கல் வாங்கல்கள்

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்படி கொள்வனவிற்காக இதற்கு முன்னர் இரு தடவைகள் கேள்வி பத்திரங்கள் கோரப்பட்டதுடன் அவை தோல்வியடைந்தமையால் மூன்றாவது தடவையாக மீண்டும் பகிரங்க பத்திரிகை விளம்பரம் மூலம் கேள்வி பத்திரங்கள் கோரப்பட்டு தகைமையான விநியோகத்தரை தெரிவு செய்வதற்கு வாய்ப்பு உருவாக்கப்பட்டது.

இதன் போது 5 விநியோத்தர்கள் விலைமனுவை சமர்ப்பித்ததுடன் இதிலிருந்து தகைமையான விநியோகத்தரை தெரிவு செய்வதற்கு முன் குறித்த விநியோகத்தர்களுக்கு தனித்தனியே அழைத்து அவர்களின் விளக்கவுரைகள் (Demonstration) தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவால் பெறப்பட்டது. இங்கு கண்டறியப்பட்ட விடயங்களுக்கு அமைவாக குறைந்த விலையை பதிவு செய்திருந்த விநியோகத்தரின் குறைபாட்டின் காரணமாக அவ்விலை மனு நிராகரிக்கப்பட்டது.

இரண்டாவது அதிக விலையை சமர்ப்பித்த ET Lab நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் அவர்கள் கைவிரல் அடையாள இயந்திரங்களை மாத்திரம் விநியோகிப்பதாகவும் சம்பள தயாரிப்பு மென்பொருளை வேறு நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக்கொடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

மூன்றாவதாக அதிக விலையை சமர்பித்த Exel Trading நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் சில பொருட்கள் (உதா: UPS Voice Prompt) வழங்கப்படமாட்டாதெனவும் அப்போது SPC விபரக்கூற்றுக்கு பொருந்தவில்லையென புலப்பட்டது. எனவே இவ்விலைமனு நிராகரிக்கப்பட்டது.

நான்காவது அதிக விலையை சமர்ப்பித்த Micro Device நிறுவனம் SPC விபரக்கூற்றுடன் பொருந்தும் வகையில் விலை மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் விலை மனுவிற்கான கேள்வி பத்திரம் அளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

ஐந்தாவது அதிக விலை SPC விபரக்கூற்றுக்கு ஏற்ப பொருந்தக் கூடிய வகையில் காணப்பட்ட போதிலும் விலை அதிகம் என்பதால் நிராகரிக்கப்பட்டது.

ET Lab Manufacturing (Pvt) டுவன நிறுவனத்தின் கேள்வி பத்திரங்கள் திறக்கப்பட்டபோது வழங்கப்பட்ட கிரயம் ரூ. 1,241,000/- ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. சம்பள தயாரிப்பு மென்பொருளுக்காக செலவாகும் ரூ. 350,000/- மொத்த தொகையுடன் சேர்க்கப்படவில்லை. இதற்கு அமைவாக சம்பள தயாரிப்பு மென்பொருளின் பெறுமதியை கேள்விப்பத்திரத்தில் சேர்க்கப்பட்ட மொத்த தொகையில் சேர்க்காமையினால் உறுதிப்படுத்தப்படுவது இது பற்றி கவனம் செலுத்தப்படவில்லை என்பதாகும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்பட்ட பின்னர் இது தொடர்பில் 2012.07.30 ஆம் திகதி கடித மூலம் அறிவித்த போதும் மதிப்பீட்டுக்கு உட்படுத்த முடியாது.

இன்றையளவில் இதற்கு முன் இரண்டு தடவைகள் இவ்வாறு கேள்வி பத்திரங்கள் கோரப்பட்டு விநியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டிருந்தமையால் தொழில்நுட்ப குழு உறுப்பினர்கள் இது பற்றி அறிந்திருந்தமையால் நிபுணத்துவ உதவிக்காக தேவை எழவில்லை.

ET Lab நிறுவனம் வரவுப்பதிவு, வெளிச்செல்லல் பதிவு இயந்திரங்களை மாத்திரம் அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த போதிலும் சம்பளம் தயார் செய்யும் மென்பொருளை வழங்கியிருக்கவில்லை. அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் வரவு மற்றும் வெளிச் செல்லல் பதிவு ஆகிய சகல விடயங்களுக்கும் மென்பொருளை ஒரே நிறுவனத்தில் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்தமையால் இவ்வியந்திரங்கள் அனைத்தையும் ஒரே நிறுவனத்தில் பெற்றுக்கொள்வது பற்றி ஆராயப்பட்டது. ET Lab நிறுவனத்தில் விரல் அடையாள இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு சில காலம் அவற்றை மாத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ளமைக்கான சேவை அறிக்கை அரச நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள சேவை அறிக்கையையும் கருத்திற் கொண்ட போதும் அவை குறித்த செயற்பாட்டிற்கு போதுமானதாக இருக்கவில்லை.

விரல் அடையாள இயந்திரங்களின் பாவனை மூலம் ஊழியர்களின் வரவு மற்றும் வெளிச் செல்லல் பதிவுகளை உட்செலுத்தி சம்பள தயாரிப்பு மென்பொருள் பாவனையின் ஊடாக சம்பளத்தை தயாரிப்பது மற்றும் வேறு அறிக்கைகளை பெற்றுக்கொள்ளும் முறை எமது நிறுவனத்திற்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். 2013 பெப்ரவரி மாதமளவில் ஒரு மாத சம்பளம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் அதன் குறைபாடுகள் 2013.02.15 ஆம் திகதியளவில் Micro Device நிறுவனத்திடம் முகாமையாளரால் (நிர். மற்றும். மனித வளங்கள் அபி) அறிவிக்கப்பட்டது. ஜனவரி மாதம் தொடக்கம் எதிர்வரும் மாதங்களுக்கு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தமையால் எதிர்கால குறைபாடுகளை கலந்துரையாடி தீர்க்க முடியுமென்பதால் 2013.06.17 ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு கொடுப்பனவை விதப்புரை செய்திருந்தது.

எதிர்காலத்தில் இப்பொறிமுறையை நடைமுறைப்படுத்தும் மற்றும் பயன்படுத்தும் இரு தரப்பினருக்கும் சிக்கல்கள் குறைவாக இருக்கும்.

## 3. நிதி மற்றும் தொழிற்பாட்டு பகுப்பாய்வு

### 3.1 நடைமுறை மூலதன முகாமைத்துவம்

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் குறுங்கால கடன் பெறும் எண்ணிக்கை அதிகரித்தமைக்கு இணைவாக செயற்றிறனையும் கூட்டுத்தாபனம் அதிகரித்துள்ளது. 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 இல் 21% ஆல் மொத்த விற்பனை புரள்வை அதிகரிக்க முடிந்ததுடன், பாடபுத்தக அச்சிடல் கட்டளை கிடைத்தவுடன் அச்சுப் பணிகளை ஆரம்பிக்க முடிந்தது. இதன் பலனாக தாமதமின்றி நாடு பூராவும் 2012 ஆண்டில் பாட புத்தக விநியோகத்தை கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மேற்கொண்டது.

(ஆ) போற்றத்தகு மட்டத்தில் (Optimum Level) கையிருப்பை பேணுவதன் மூலம், 2012 உற்பத்திக்காக குறைந்த மூலப்பொருள் அளவினையே கொள்வனவு செய்ய வேண்டியேற்பட்டது. இதற்கு அமைவாக 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 17% ஆல் குறுகியகால கடன் அளவில் 2012 இல் உற்பத்தியை மேற்கொள்ள முடிந்தது. 2012 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் 7% ஆல் மொத்த விற்பனை புரள்வு அதிகரித்தது. இங்கு ஒட்டுமொத்த காலப்பகுதியான 2010 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆண்டில் விற்பனை புரள்வு 34% ஆல் அதிகரிக்க முடிந்தமைக்கான காரணம் வேறு நிதி பெறுவனவுகளின்றி, குறுங்கால வங்கி கடன்களாகும்.

(இ) இப்பகுப்பாய்வில் கடன்பட்டோரை திரவத்தன்மை குறைந்த சொத்தாக காட்டப்பட்டிருந்த போதிலும், இதில் 68% கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் கிடைக்க வேண்டியிருந்த நிலுவையாகும். 2014 ஆம் ஆண்டில் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நிலுவை பணம் உள்ளிட்ட குறித்த பற்றுச் சீட்டுக்கள் சீராக்கப்பட்டமையால் நடைமுறை விகிதம் முந்திய ஆண்டுகளுடன் ஒப்பீட்டளவில் அதிகரித்திருந்தது.

(ஈ) கடன்பட்டோரிடமிருந்து கடன் பணத்தை அறிவிடுவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் ஊடாக 100% அறவிடப்படாத கடன்பட்டோருக்கு இறுதி நினைவூட்டல் அனுப்பப்பட்டு, மேலும் குறித்த கடன்பட்டோரிடமிருந்து பகுதியளவேனும் அறவிட முடியுமா என ஆராயப்படுகின்றது. மேற்படி 3.2 (இ) இல் தெளிவுபடுத்தப்பட்டவாறு 2013.12.31 ஆம் திகதியில் காணப்பட்ட கடன்பட்டோரில் 68% ஏப்ரல், மே மாதமளவில் பெறப்பட்டிருந்தமையால் இங்கு குறிப்பிட்டவாறு நடைமுறை பொறுப்புக்களை தீர்ப்பதற்கு சிக்கல் தோன்றவில்லையென்பது தெளிவடைகின்றது.

## 4. தொழிற்பாட்டு பகுப்பாய்வு

### 4.2 முகாமைத்துவ செயலின்மை

(அ) தாமத தண்டப்பணத்திற்கு கடதாசிகளை பெற்றுக்கொள்ளும் தாமதம் மாத்திரமின்றி வேறு காரணிகளும் தாக்கம் செலுத்துகின்றன. ஒப்புநோக்கல் தாமதமாக அங்கீகரிக்கப்பட்டமை, அச்சுப் பணி மேற்கொண்ட சமயம் திருத்தங்கள் சேர்க்கப்பட்டமை, நிறமூட்டலின் போது ஏற்படும் மாற்றங்களுக்கு தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல் என்பனவாகும். இதன் போது உரிய திகதியில் பாட புத்தகங்களை பெற்றுக்கொடுப்பது மாத்திரமின்றி சரியான முறையில் நிறமூட்டுவது தொடர்பிலும் விஷேட கவனம் செலுத்தப்படும். எனினும் மேற்கூறப்பட்ட காரணிகளை கருத்திற்கொண்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் தாமத தினங்களுக்கு சலுகை காலமும் வழங்கப்படும். விஷேடமாக 2013 ஆம் ஆண்டில் சில புத்தகங்களுக்கு ஒரு மாத சலுகை காலம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அச்சக நிறுவனமாக (அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம்) கல்வி வெளியீட்டு திணைக்களத்திற்கு தேவையான வகையில் அவசரமாக ஒரு புத்தகம் அல்லது பல புத்தகங்களை அச்சிட்டு கையளிப்பதற்காக போதுமான கடதாசி இருப்பில் வைத்துக்கொள்வது நியாயமாக அமைவதுடன், கையிருப்பில் கூடுதல் கடதாசியை வைப்பதால் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் பாட புத்தக அச்சுப் பணிக்கு இக்கடதாசி கிடைப்பதால் அச்சுப் பணிகளை ஆரம்பிக்கவும் முடியும். இதற்கு அமைவாக தாமத தண்டப்பணத்தையும் குறைக்க முடியும்.

இக்கையிருப்பிற்காக அரச வங்கியொன்றுக்கு வட்டியை செலுத்த வேண்டியேற்பட்ட போதிலும் தேசிய பணியின் நிமித்தமாக மேற்கொள்ளப்படும் பாட புத்தக அச்சு பணியின் போது அவசர கட்டளைகளை பூர்த்தி செய்து கொடுப்பதற்கு முடியாது போனால் அது பாடசாலை மாணவர்களுக்கு இழைக்கப்படும் பேரநீதியாவதோடு குறித்த கையிருப்பை வைத்திருப்பது தண்டப்பணத்தை குறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியாகவும் அமையும்.

(ஆ) காட்டப்பட்டுள்ள நிறமூட்டல் இயந்திரம் 2004 மார்ச் மாதம் கொள்வனவு செய்யப்பட்டது. இதன் மூலம் உற்பத்திகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதுடன் 2009 பெப்ரவரி மாதத்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுத்த முடியாது போயுள்ளது.

இவ்வியந்திரக்கோளாறு பற்றி உள்நாட்டு விற்பனை முகவரான JDC நிறுவனத்திற்கு அறிவித்துள்ளதுடன் விஷேட பயிற்சி பெற்ற இரு திருத்துநர்கள் வருகை தந்து பரிசோதித்துப் பார்த்து ரூ. 2,104,200/- + VAT மதிப்பீடொன்றை சமர்ப்பித்தனர். எனினும் இவ்வகையான இயந்திரங்கள் மூலம் உற்பத்தி பணிகள் நிறுத்தப்பட்டிருப்பதால் இதற்காக உதிரிப்பாகங்கள் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்பதாலும் மேற்படி மதிப்பீட்டை ஏற்று இயந்திர கோளாறை திருத்தம் செய்தாலும் இதற்காக உத்தரவாத காலத்தினை பெற்றுக்கொடுக்க முடியாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் மேற்படி இயந்திரத்தை திருத்துவதற்காக பரிசோதித்துப் பார்ப்பதற்கு பிரிதொரு மின்னியல் பொறியியலாளரிடம் கையளிக்கப்பட்டாலும் உதிரிப்பாகங்கள் இன்மையால் திருத்த முடியாமல் போனது. பின்னர் அச்சு இயந்திரம் பற்றிய விஷேட நிபுணத்துவம் கொண்ட மின்னியல் பொறியிலாளரிடம் (மார்க் பர்னாந்து) கையளிக்கப்பட்ட போதிலும் அவராலும் இந்த இயந்திரத்தை திருத்த முடியவில்லை.

தற்போது நிறுமூட்டல் இயந்திர பாவனை இல்லாமையால் மிகவும் உயர் தொழில்நுட்பத்தை கொண்ட CTP இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு 2011 ஜுலை மாதத்தில் முயற்சித்த போதும் அது தோல்வி கண்டது. எனினும் எதிர்காலத்தில் கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4.3 தொழிற்பாட்டு செயலின்மை

(அ) அச்சிடல் திட்டத்திற்கு அமைவாக ஆண்டொன்றுக்கான கடதாசி தேவை 958 மெ.தொ. ஆகும். 2013 ஆண்டில் 764 மெ.தொ. கடதாசி பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் கடந்த ஆண்டை விட 174 மெ.தொ. அதிகமாகும். இதற்கு அமைவாக 848 மெ.தொ. கடதாசி இந்த ஆண்டில் அப்பியாசக் கொப்பி உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

உற்பத்தி திட்டவரைபு தயாரிக்கப்பட்ட போதிலும் பல்வேறு காரணங்களால் அது நடைமுறைப்படுத்தப்படும் போது மாற்றங்கள் செய்யப்படும். ஆண்டிறுதியில் சில புத்தகங்களுக்கு கூடுதல் கேள்வி எழும்புவதால் பற்றாக்குறை தோன்றினாலும் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து புத்தகங்களும் விற்பனையாகியுள்ளது.

## 4.4 செயலிழந்த குறை பயன்பாடுள்ள சொத்துக்கள்

(அ) 2009, 2010 மற்றும் 2011 ஆண்டுகளில் கணக்காய்வு அறிக்கைகளில் தொடர்ந்தும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த விடயமென்னவென்றால் கூட்டுத்தாபனத்தின் இயந்திரங்கள் குறை பயன்பாட்டை கொண்டுள்ளதென்பதாகும். இதற்கு முக்கிய காரணமானது கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான மிக பழைமையான அச்சு இயந்திரங்கள் நிதமும் இயந்திர கோளாறுக்கு உள்ளானமையாகும். எனவே இயந்திரங்களை திருத்துவதற்கு தேவையான சகல உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டு திருத்துவதால் (Comprehensive Repair) இதனை தடுப்பது மூலப்பொருள் கொள்வனவில் முக்கிய நோக்கமாகும்.

கூட்டுத்தாபனத்தின் முக்கிய உற்பத்தி நடவடிக்கையான பாடசாலை புத்தக அச்சிடலுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இந்த திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டியேற்படுவதால் இவ்வாறு காலதாமதமானது. 2014 ஆண்டில் பாடசாலை புத்தக அச்சு பணி நிறைவடைந்ததும், எஞ்சிய உதிரிப்பாகங்களை பயன்படுத்தி திருத்த வேலைகளை நிறைவு செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வொரு இயந்திரத்திற்கும் தனித்தனியே உதிரிப் பாகங்கள் இனம் காணப்பட்ட பின்னர் அரசாங்க கொள்வனவு வழிகாட்டலுக்கு அமைவாக இக்கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. இயந்திரங்களில் அன்றாடம் கோளாறுகள் ஏற்பட்டமையால் பாட புத்தக அச்சுப் பணிகள் தாமதமடைந்தமையால் ஏற்க வேண்டிய தாமத தண்டப் பணம் வங்கி மேலதிப் பற்று மற்றும் குறுங்கால கடன் வட்டி என்பவற்றை மிஞ்சுவதால் இக்கொள்வனவிற்கு பணம் செலவிடப்பட்டது. 2014 ஆண்டில் பாடசாலை புத்தக அச்சுப் பணிகள் நிறைவடைந்தவுடன் எஞ்சிய உதிரிப் பாகங்களை பயன்படுத்தி திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டதால் இந்த உதிரிப்பாகங்களை குறை பயன்பாட்டு சொத்துக்கள் என கருத முடியாது.

(ஆ) இங்கு மாதிரி பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட உதிரிப்பாகங்களில் சிலவற்றை தனித்தனியாக பொருத்த முடியாது அத்துடன் அவற்றை பண்டங்களாக பயன்படுத்த வேண்டியேற்பட்டது. எனவே இதுவரை எந்த சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தாது இருந்தமையால், அவை அநாவசியமானவை என உறுதிப்படுத்த முடியாது. மேலும் தற்போது கூட்டுத்தாபனம் பயன்படுத்தும் அச்சு இயந்திரங்கள் 30 ஆண்டுகளுக்கு மேல் பழைமையானவை என்பதால் அவற்றை தயாரித்த தாய் கம்பனிகளிடமிருந்து (Parent Companies) கூட இவ்வாறான உதிரிப்பாகங்களை தற்காலத்தில் கொள்வனவு செய்ய முடியாது. இதற்கேற்ப தேவைப்படும் சந்தர்ப்பத்தில் இவற்றை பெற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறு மாதிரி பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட உதிரிப்பாகங்களின் எண்ணிக்கை 64 என்பதுடன் இவற்றின் பெறுமதி ரூ. 3.4 மில்லியன் ஆகும். கூட்டுத்தாபனம் பயன்படுத்தும் அச்சு இயந்திரங்களிலிருந்து ஆண்டொன்று கிடைக்கு முடிவுப் பொருட்களின் பெறுமதியுடன் ஒப்பிடும் போது இந்த உதிரிப்பாகங்களின் பெறுமதி மிக குறைவானதாகும்.

(இ) இயந்திரங்கள் இயங்காமையால் செயலிழந்தமை மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. இயந்திரங்கள் மிக பழைமையானவை என்பதால் இயந்திரங்கள் செயலிழப்பதாலும் செயலிழந்த காலம் அதிகரிக்கும்.

(ஈ) திட்டமிட்டவாறு பிரதான இயந்திரத்தை இயக்குவதற்கு முடியாது போனால் (கோளாறு நிலையின் அடிப்படையில், மூலப்பொருள் பற்றாக்குறை அடிப்படையில் அல்லது உதிரிப்பாகங்களின் பற்றாக்குறையின் அடிப்படையில்) ஏனைய இயந்திரங்களின் செயற்பாட்டில் முறையற்ற தன்மை ஏற்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இந்த இயந்திரங்களும் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(உ) இவ்வியந்திரங்கள் மிகவும் பழைமையானவை, அச்சுப் பணியில் ஈடுபடுத்த முடியாது. இந்த இயந்திரங்களை சுத்திகரிப்புச் செய்வதற்கு பெரும் நிதி செலவாகலாம் அத்துடன் அவ்வாறு செலவு செய்தால் வேறு பிரச்சினைகள் தோன்றும்.

(ஊ) 80 பக்க செயல் நூல் இருப்பு பிரதேச செயலகங்கள் ஊடாக இலவசமாக விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 4.5 கண்டறியப்பட்ட குறைபாடுகள்

2013 டிசம்பர் 31 ஆம் திகதியில் இருப்பு மாற்று கணக்கில் உள்ளடக்கப்பட்ட ரூ. 222,205/- இருப்பு 2010 ஆண்டில் சர்வதேச புத்தக கண்காட்சியில் ஏற்பட்ட குறைபாட்டிற்கு ஏற்பட்ட முன்கொண்டு வரப்பட்ட மீதியாகும். இணை அமைச்சினால் இது பற்றி விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் அறிக்கையின் பிரகாரம் குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்படி பணப்பற்றாக்குறை பற்றி இணை அமைச்சு விசாரணையொன்றை நடத்துவதுடன் அதன் அறிக்கை கிடைத்த பின்னர் குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 4.6 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

(அ) பகிரங்க கேள்வி பத்திரம் மூலம் கிடைத்த உரிய பெருவிலையை பரிசோதித்து தொழில்நுட்ப குழுவின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கடதாசி கொள்வனவு மேற்கொள்ளப்படுகிறது. தொழில்நுட்ப குழுவில் விஷேட அச்சு கடதாசிகளை கொள்வனவு செய்யும் போது கருத்திற்கொள்ள வேண்டிய சில விடயங்கள் உள்ளதெனவும் கடதாசிகளின் விபரக்குறிப்புகளில் சில விபரக்குறிப்பு வரையறைகளை தவிர்க்க வேண்டியேற்படும். இவ்வாறு மேற்கொள்ளப்படுவது நிறுவனத்திற்கு ஏற்படும் நிதி நட்டத்தை கருத்திற்கொண்டாகும். J.R. International நிறுவனம் பெருவிலையை சமர்ப்பித்த போது ஜீ.எஸ்.எம். பற்றி விடுத்துள்ள கூற்றிற்கு அமைவாக இரண்டாவது பெருவிலையை சமர்ப்பித்துள்ள S.S. Trading நிறுவனத்திற்கு பெருவிலையை கையளித்திருந்தால் ரூ. 612,428.25 நட்டம் நிறுவனத்திற்கு ஏற்பட்டிருக்கும். மேலும் J.R. International நிறுவனம் (இதன் உரிமையாளர் தலைவரின் முன்னாள் பிரத்தியேக உதவியாளர் அல்லது இஹல கெதர அபேசிங்க பண்டார அல்ல என்பதுடன் இதற்கு முன்னர் கடதாசிகளை வழங்கிய Jupiter Trading நிறுவனத்தின் பணியாட் தொகுதியில் முன்னாள் ரெக்ஸி பெரேரா என்பவராவார்) ஜீ.எஸ்.எம். பற்றி வெளியிட்டுள்ள கூற்று மேலுமொரு கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டடிய விடயமாகும். முதலாம் மற்றும் இரண்டாம் விலைகோருபவர்களில் எந்த விலைகோருபவருக்கு இது அளிக்கப்பட்டாலும் அது கணக்காய்விற்கு உட்படும் விடயமென்பது நன்கறியப்பட்டதென்பதுடன் குறைபாடுகள் சமர்ப்பிக்கப்பட்ட வேறு பெருவிலையை ஏற்றுக்கொள்ள முடியாமை மற்றும் நிறுவனத்திற்கு ஏற்படும் நிதி ரீதியான நன்மையை கருத்திற்கொண்டு இப்பெருவிலை அளிக்கப்பட்டது.

(ஆ) கொள்வனவு செய்யப்பட்ட எழுதும் கடதாசி இருப்பு கிடைத்த பின்னர் கடதாசியின் ஜீ.எஸ்.எம் அளவு மற்றும் நிறம் பொருத்தமானதென உறுதி செய்யப்பட்ட பின்னர் ஒரு ரீலை இட்டு இயந்திரத்திற்கு பொருந்துமா அல்லது பொருந்தாதா என எழுத்து மூலம் உற்பத்தி பிரிவு விநியோகப் பிரிவிற்கு அறிவிக்கும். அதன்பின்னர் கேள்வி பத்திர ஆவணத்தின் எஞ்சிய பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கு அமைவாக 2013 ஜூன் மாதம் 17 ஆம் திகதி பொருத்தமென உறுதி செய்யப்பட்டு இருப்பை உபயோகிக்கும் பணிகள் 2013 ஜூலை 01 தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(இ) செயற்றிறன் பிணைக்குரிய பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைத்த பின்னர் அதனை உற்பத்திக்கு விடுவித்து, விநியோகிக்கப்பட்ட மூலப்பொருட்களின் தரம் உற்பத்தி பிரிவின் திருப்தி பற்றி உறுதிப்படுத்தல் கடிதம் பெறப்பட்ட பின்னர் செயற்றிறன் பிணையை விடுவிக்கும் வழமையான வழிமுறை பின்பற்றப்படும்.

(ஈ) அப்பியாசக் கொப்பிகள் மற்றும் சீ.ஆர். கொப்பிகளுக்கு ஒவ்வொரு உற்பத்தியாளரினால் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த தரத்துடன் கவர்ச்சியான தோற்றத்துடன் புத்தகங்கள் சந்தைக்கு விடப்படுகின்றன. விபரக்குறிப்புகளில் குறைந்தபட்சம் இருக்க வேண்டிய தரம் குறிப்பிடப்பட்ட போதிலும், வணிக நடவடிக்கைக்காக பயன்படுத்தும் போது மிகச் சிறந்த தோற்றத்தை கொண்ட புத்தகங்களை சந்தைக்கு விநியோகிக்க வேண்டும். இங்கு குறைந்த பெருவிலையை விட இரண்டாம் பெருவிலையின் மொத்த மதிப்பீட்டு கிரயம் ரூ. 52,290/- என்ற போதிலும் இது ஒரு புத்தகத்தை உற்பத்தி செய்வதற்கான செலவு மூன்று சதத்தையும் விட குறைவாகும். இங்கு மூன்று சதத்திற்கு அதிகமாக செலுத்தினாலும் இதனூடாக மேற்படி புத்தகங்களை சந்தைக்கு விநியோகிப்பதால் கிடைக்கும் இலாபத்தை விட அதிகமென அவதானித்து தொழில்நுட்ப குழுவும் கொள்வனவு குழுவும் மேற்படி தீர்மானத்தை எட்டியது.

PR விநியோக பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பது 2013.11.13 ஆம் திகதி என்பதுடன் இது மிக அவசர தேவையான விடயமென காட்டப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக மேற்கொள்ளக்கூடிய சிறந்த மாற்று வழியாக மேற்படி கேள்வி பத்திரத்தில் 50% மீள் கட்டளை விடுக்கப்பட்டு கடன் ஆவணங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு 16 நாட்களுக்குள் கடதாசிகள் கப்பலில் ஏற்றப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது.

PR பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு 42 நாட்களுக்குள் கடதாசிகள் வழங்கப்பட்டுள்ளன. மீள் கட்டளை மேற்கொள்ளப்பட்டு இதனை பெற்றுக்கொடுக்காவிட்டால் இதற்காக குறைந்தபட்சம் 04 மாதங்கள் கடக்கும்.

## 4.7 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

இது பற்றி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிவுறுத்தலின் படி பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு அதன் அங்கீகாரத்தின் பிரகாரம் அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக இந்த ஊழியர்கள் அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இணைக்கப்பட்ட ஊழியர்களின் கடமைகளை மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தரினால் மேலதிக நேரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. மேலும், இணைக்கப்பட்டுள்ள இடங்களில் மேற்கொள்ளப்படும் கடமைகளுக்காக சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது.

விடுவித்துள்ள நிறுவனத்தில் நிறைவேற்றப்படும் சேவைக்கு ஏற்ப அக்காலப்பகுதியில் அந்த மேற்பார்வை உத்தியோகத்தர் பரிந்துரை செய்யப்படும் மேலதிக நேர கொடுப்பனவு அளவை செலுத்த வேண்டியேற்பட்டது.

அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் மேலதிக நேர சேவையை மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தரின் பரிந்துரைகளை கருத்திற்கொண்ட தலைவர் பிரத்தியேக ஆவணங்களை பரிசோதித்த பின்னர் அங்கீகரிப்பார்.

## 4.8 பணியாட்தொகுதி நிர்வாகம்

(அ) அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்ட பின்னர் தலைவரின் பணிகளுக்கு உதவுவதற்காகவும் விற்பனை நடவடிக்கைகளை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளும் நோக்குடனும் பணிப்பாளர் சபையின் உப தலைவராக திரு.எச்.கே.டீ. லக்ஷ்மன் காமினி நியமிக்கப்பட்டார். மேலும் 03 ஆண்டு சேவை காலம் முடிவடைந்த பின்னர் 2013.06.18 ஆம் திகதி மீண்டும் அப்பதவியில் அவர் நியமிக்கப்பட்டதுடன் நியமனம் வழங்கப்பட்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும் இதற்குரிய பணிப்பாளர் சபை பத்திரம் வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டது. அத்துடன் உப தலைவர் பதவிக்கு நியமித்தல் தொடர்பிலான காப்பு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுவதற்கு விடயத்திற்கு பொறுப்பான கௌரவ வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் 1994.10.14 ஆம் திகதி 532 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் குறித்த பணிப்பாளர் சபை பத்திரத்தில் கொள்கை ரீதியான காரணங்களின் அடிப்படையில் பணிப்பாளர் நியமிக்கப்படுவதில்லை எனவும் அதற்கு பதிலாக உப தலைவர் மாத்திரம் நியமிக்கப்படுவாரெனவும் தொழிற்பாட்டு பணிப்பாளர் பதவிக்குரிய கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகள் உப தலைவர் பதவிக்கு வழங்கப்படுமெனவும் பணிப்பாளர் சபை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக நியமிக்கப்படுகின்ற உப தலைவருக்கு தொழிற்பாட்டு பணிப்பாளரொருவருக்கு பெற்றுக்கொடுக்கப்படும் சகல சலுகைகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிலவும் தேவைகளின் அடிப்படையில் சேவை அவசியத்தின் நிமித்தமாக தொழிற்பாட்டு முகாமைத்துவ பதவியை ஏற்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் பணி நோக்கம் காரணமாக உதவி விநியோக முகாமைத்துவ பதவிக்கு ஒரு நியமிக்கப்பட்டார். இவருக்கு பிரத்தியேகமாக இப்பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

(ஆ) அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன ஆட்சேர்ப்பு படிமுறை 2012.09.07 ஆம் திகதி தொடக்கம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த அங்கீகாரத்திற்கு முந்திய காலத்தில் இம்முகாமைத்துவ பயிலுணர்கள் பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறித்த பயிற்சியின் பின்னர் அவர்களை பயிலுணர் பதவிக்கு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இதற்கு முன் கூட்டுத்தாபனத்தில் இவ்வாறான முறையியல் காணப்பட்டதோடு புதிய ஆட்சேர்ப்பு படிமுறையின் மூலம் பயிலுணர்களை சேர்ப்பதற்கு ஏற்பாடுகள் அளிக்கப்படவில்லை. எனினும் இப்பதவியுயர்விற்கான நேர்முகப் பரீட்சைக்கு இவர்களும் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதுடன் இவர்களது விஷேட பயிற்சியை கருத்திற்கொண்டு மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதன் பின்னர் ஆட்சேர்ப்பு வழிமுறைக்கு ஏற்ப முகாமைத்துவ பயிலுணர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை.

பட்டதாரி பயிலுணர்கள் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பது இப்புதிய தாபன கட்டமைப்பு மற்றும் ஆட்சேர்ப்பு வழிமுறை அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னராகும். எனவே இப்பதவிகளுக்கு அவ்வேளையில் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த பயிலுணர்களின் விஷேட பயிற்சியை கருத்திற்கொண்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து நேர்முகப்பரீட்சை குழுவின் தீர்மானத்திற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டியேற்பட்டது.

(இ) தேவையை அடிப்படையாகக் கொண்டு தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் தேவையல்லாத சந்தர்ப்பத்தில் நீக்கக்கூடிய வகையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 30 இற்கு ஏற்பட தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு வழிமுறை 2012 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வேளையில் இந்த செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திறமையின் அடிப்படையிலும் தற்காலிக அடிப்படையிலும் மாத்திரம் இந்த தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மாதாந்த கொடுப்பனவு மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளுக்காக ரூ.1,500/- உச்சளவைக் கொண்டதாக தொலைபேசி கட்டணத்தை மீள் நிரப்புவதற்கும் வசதியளிக்கப்பட்டுள்ளன.

வெளிக்கள பணிகளுக்காக கூட்டுத்தாபனத்தின் சுற்றறிக்கை இலக்கம் 54 – 4024 கொண்ட கெப் வாகனம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருப்பதுடன், அதற்காக மாதாந்தம் ரூ.15,000/- உச்சளவைக் கொண்டதாக எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. கௌரவ வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சர் மத்திய மாகாணத்தில் மேற்கொள்ளும் விஜயங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்குபற்றுதல் போன்ற சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு அரச அனுசரனை போன்றவற்றை பெற்றுக்கொள்வதும் இவரது கடமையாகும்.

(ஈ) இந்த விண்ணப்பதாரிகளை தெரிவு செய்த பின்னர் அவர்கள் சமர்ப்பித்துள்ள உறவினர் அல்லாத தன்னை நன்கு அறிந்த இரு உத்தியோகத்தர்களின் விபரங்களை கோரிய போதும் இந்த உத்தியோகத்தர்கள் வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்களிடமிருந்து தெரியவரவில்லை. எனினும் பதவியை நிரந்தரமாக்கும் போது தேவையேற்படின் முந்திய சேவை நிறுவனங்களிடமிருந்து எழுத்து மூல அறிக்கைகளை பெற்றுக்கொண்ட பின்னர் அதனை கருத்திற்கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நுகர்வோர் அலுவல்கள் பற்றிய அதிகார சபையில் சேவை சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்படவில்லையென்றால் அதற்கு புள்ளிகளை வழங்கப்படவில்லை. அவர் நேர்முகப் பரீட்சை குழுவிடம் தகவல்களை மறைத்துள்ளமை பற்றி விளக்கம் கோரவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நேர்முகப் பரீட்சையில் புள்ளிகளை வழங்கும் போது ஆட்சேர்ப்பு வழிமுறைக்கு ஏற்ப விதியொன்றை பயன்படுத்தப்பட்டுள்ளது. நிறைவேற்ற தர பதவியில் குறைந்தபட்சம் மூன்று வருட அனுபவம் இப்பதவிக்கு குறித்துரைக்கப்பட்டிருப்பதும் கணக்கீடு கணக்காய்வு ஆகிய துறைகளில் அனுபவத்திற்கு மேலதிகமாக புள்ளிகளை பெற்றுக்கொடுக்கும் போது ஆகக்கூடியதாக 10 ஆண்டுகள் வரை ஆண்டொன்றுக்கு 03 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டது. இங்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி மற்றும் மாலா குமுதினி ஆகியோர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் கணக்குப் பதிவு துறையில் 10 ஆண்டுகளுக்கு மேல் சேவையாற்றியிருந்தமையால் அவர்களுக்கு மொத்த புள்ளிகளும் வழங்கப்பட்டன.

## 4.9 வாகன பயன்பாடு

(அ) 2013 ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் மூலதன வரவு செலவு அட்டவணைக்கு அமைவாக பல்வேறு வாகன தலைப்பின் கீழ் 10 மில்லியன் ரூபா மற்றும் 11 மோட்டார் சைக்கிள்களுக்காக 1.5 மில்லியன் ரூபா என்றவாறு 11.5 மில்லியன் ரூபா மோட்டார் வாகனங்களுக்கு ஒதுக்கப்பட்டது. மூலதன செலவினத்திற்கு கூட்டுத்தாபன வரவு செலவு அட்டவணையில் நிதி ஒதுக்கியமைக்காக அவற்றை குறித்த ஆண்டில் நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பங்களும் உண்டு.

இதற்கு அமைவாக 2012 ஆண்டில் ரூ. 20,450,000/- மோட்டார் வாகனத்திற்காக ஒதுக்கப்பட்ட போதும் ஊழியர் போக்குவரத்திற்காக இரண்டு பேருந்துகளை கொள்வனவு செய்வதற்கு ரூ. 7,530,000/- மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. 2012 ஆண்டிறுதியில் வாகனங்களுக்கென ஒதுக்கப்பட்ட ரூ. 12,920,000/- = (ரூ. 20,450,000/- + ரூ. 7,530,000/-) எஞ்சியிருந்தது.

தலைவர் பயன்படுத்திய மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டு 05 வருடங்கள் கடந்துள்ளமையால் அதற்காக புதிய மோட்டார் வாகனத்தை கொள்வனவு செய்ய தேவை உணரப்பட்டது. மேலும் ஏனைய மோட்டார் வாகனங்களும் பழையவை என்பதால் வருடாந்தம் வாகன பராமரிப்பிற்கென பெருமளவு பணத்தை செலவிட வேண்டியேற்பட்டது.

மேற்படி விடயங்களை கருத்திற்கொண்டு முகாமையாளர் நிதி முகாமையாளர் 2013.04.09 ஆம் திகதி பணிப்பாளர் சபை கூட்டத்தில் இலக்கம் 5398 கொண்ட பணிப்பாளர் சபை பத்திரம் ஊடாக மோட்டார் வாகனம் மற்றும் 9 மில்லியன் ரூபாவிற்கு விநியோக பணிகளுக்கு வான் ஒன்றும் உள்ளடங்கும் வகையில் மோட்டார் வாகனங்களுக்கான வரவு செலவு நிதி ஒதுக்கீட்டை 29 மில்லியன் ரூபாவாக திருத்துவதற்கு அங்கீகாரத்தை கோரி கிடைக்கப்பெற்றுள்ளார்.

தலைவரின் உத்தியோகப்பூர்வ வாகனத்திற்கு ரூ.10 மில்லியனை செலவிடுவதற்கு இலக்கம் ஜீபீ/கோப்/37 மற்றும் 2013.04.08 ஆம் திகதி கடிதத்தின் ஊடாக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. பொது முகாமையாளரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு ரூ.08 மில்லியனை செலவிடுவதற்கு இலக்கம் ஜீபீ/கோப்/37/ஜீஎன் மற்றும் 2013.04.17 ஆம் திகதி கடிதத்தின் ஊடாக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. மேற்படி இரு வாகனங்களுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட செலவினத்திற்குள் 2013 ஆண்டில் வாகன கொள்வனவிற்கு செலவிடப்பட்டுள்ளது.

மேற்படி வாகனங்களை கொள்வனவு செய்யும் பணிகள் 2011 ஆண்டின் இறுதி பகுதியில் என்பதுடன் அப்போது காணப்பட்ட வாகன விலை மட்டங்களின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் வாகனங்களின் விலை அக்காலத்தில் பெரும் தொகையால் அதிகரித்தமையால் மதிப்பீடு வித்தியாசப்பட்டிருந்ததுடன் அது பற்றி அமைச்சு மற்றும் அரச தொழில் முயற்சிகள் திணைக்களம் அங்கீகாரத்தை சரியாக பெற்றுக்கொண்டுள்ளது.

மேற்படி வாகனத்திற்கு ஆரம்பம் தொடக்கம் SUV வாகனம் ஒன்றுக்கு (ஜீப்) கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2013/02/22 மற்றும் 2013/04/09 ஆகிய திகதி கொள்வனவு குழு கூட்டத்தின் போது இது பற்றி கலந்துரையாடப்பட்டு மிகவும் பொருத்தமான விபரக்கூற்றுடன் பொருந்தக் கூடிய வாகனமாக Hundai Santafe வாகனம் நிதி வரையறைகள் மற்றும் எஞ்சின் கொள்ளளவு என்பவற்றின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இந்த வாகனம் தொழில்நுட்ப குழுவினால் நிராகரிக்கப்படவில்லையென்பதுடன் எஞ்சின் கொள்ளளவு அப்போதைய வரையறையின் கீழ் விஞ்சியிருந்தமையால் விதப்புரைக்க முடியாதென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் பின்னர் அதற்காக உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையால் அந்நிலைமை சமரசம் செய்யப்பட்டு அது பொருத்தமானதென கொள்வனவு குழு தீர்மானித்துள்ளது.

(ஆ) தலைவரின் உத்தியோகபூர்வ வாகனமான KV - 6172 என்ற வாகனம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 2 வாகனங்களும் சந்தைப்படுத்தல் அலுவல்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

(இ) அமைச்சரவை ஒருங்கிணைப்பாளராக (ஒப்பந்தம்) சேவையாற்றும் நிறுவன முகாமையாளர் பதவியில் பதில் கடமையாற்றும் உத்தியோத்தருக்கு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் கூட்டுத்தாபனம் அதற்காக வாகனமொன்றை பெற்றுக்கொடுக்காமையால் (போதுமான எண்ணிக்கையில் வாகனங்கள் இல்லாமை) வாடகை அடிப்படையில் வாகனமொன்றை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்குரிய வாடகையுடன் எரிபொருள் செலவினத்தை கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொண்டுள்ளது.

(ஈ) சந்தைப்படுத்தல் அலுவல்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் ஒருவர் தற்காலிக அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவருக்கு அப்பணிகளை செய்வதற்கு (வெளிக்கள பணிகளை செய்வதற்கு) வாகனமொன்று வழங்கப்பட்டிருந்தது. இந்த வாகனத்திற்கு மாதாந்தம் ரூ.1,500/- உச்சளவைக் கொண்டதாக எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது.

(உ) உதவி முகாமையாளருக்கு (பாதுகாப்பு) கடமை நிமித்தமாக வழங்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிளை கூட்டுத்தாபன வளாகத்தில் உள்ள அவரது பணிமனையில் நிறுத்தி வைக்க முடியும். இம்மோட்டார் சைக்கிள் பாவனைக்கு உதவாது என கூட்டுத்தாபன தொழில்நுட்ப ஊழியர் விதப்புரை விடுத்துள்ள போதும் பின்னர் அது ஓரளவு திருத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு பணி நிமித்தம் எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளது. இவ்வாகனத்திற்குரிய பிரயாண குறிப்பை பேணுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இக்குறிப்பு புத்தகம் மோட்டார் சைக்கிள் பரிசோதிக்கப்பட்ட தினம் பிரதம பாதுகாப்பு அரணுக்கு முன்னால் உதவி முகாமையாளரினால் (பாதுகாப்பு) கணக்காய்வு உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் இம்மோட்டார் சைக்கிளை திரும்பவும் கூட்டுத்தாபனத்திற்கு பொறுப்பேற்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஊ) சகல வாகனங்களினதும் சம்பவ பதிவேடுகள் முறையாக பேணப்பட்டிருக்காத போதிலும் இதற்கு முன்னர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களின் போது கலந்துரையாடிமைக்கு ஏற்ப வாகனங்களின் சம்பவ பதிவேடுகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொள்வனவு செய்யப்பட்ட புதிய வாகனங்களின் குறிப்புக்களை பதிய வேண்டிய விடயங்கள் இந்த கணக்காய்வு வரை முன் வைக்கப்படவில்லை. தற்சமயம் இந்த சம்பவ பதிவேடு குறிப்புக்கள் பேணப்பட்டு வருகின்றன. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பாவனையிலிருந்து நீக்குவதற்கு கண்டறியப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் சம்பவ பதிவேடுகள் தற்போது இற்றைப்படுத்தப்படவில்லை. எனினும் வாகனங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களினால் சம்பவ பதிவேடுகளை பேணும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பிட்ட விபரங்களுடன் சம்பவ பதிவேடுகளை பேணுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

## 5. கணக்கீட்டு நடவடிக்கைகளும் நல்லாட்சியும்

### 5.1 கூட்டிணைந்த திட்டவரைபு

கூட்டுதாபனத்தின் 2012 – 2016 காலத்திற்கான கூட்டிணைந்த திட்டத்திற்கு 2014.05.28 ஆம் திகதி நடைபெற்ற 746 இலக்க பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டது. இலக்கம் பிஈடி/12 மற்றும் 2003 ஜுன் 02 திகதி அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 பந்தியின் படி மேற்படி திட்டவரைபு வருடாந்தம் இற்றைவரைப்படுத்தப்படும்.

### 5.2 வரவு செலவு ஆவண கட்டுப்பாடு

இனிவரும் வரவு செலவு ஆவணங்களை பயன்தரும் முகாமைத்துவ நிர்வாக கருவியாக பயன்படுத்தும் எண்ணத்துடன் இதற்கான காரணங்கள் மற்றும் தீர்வுகளுடன் வரவு செலவு தகவல்கள் மற்றும் உண்மையான விபரங்களின் படி மாற்றங்கள் காலத்திற்கேற்ப ஒப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 5.3 கணக்காய்வு குழு

நிதி பிரிவு நேரடியாக தலையீடு செய்து, அப்பியாசக் கொப்பிகள் மூலம் அறவிடப்பட வேண்டிய கடனை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 6. கட்டமைப்பும் நிர்வாக பலவீனமும்

இங்கே (அ) முதல் (உ) வரை உள்ள நிர்வாக துறைகள் பற்றி விசேட கவமனம் செலுத்தப்படும்.

